# தென்மொழி

## புயல்வேகப் புரட்சியொன்று புறப்பட்ட திங்கே!

ழுச்சியுற்றோர் சிலர்கூடிப் பலவாறாய் அய்ந்தே
ற்றதொரு கொள்கையினை வரையறுத்து விட்டோம்!
விழுச்சியுற்ற தமிழகத்தை மீட்டெடுக்க வேண்டும்!
விடுதலைக்கே படைநடத்தி விடிவுபெற வேண்டும்!
புழுச்சிதைவாய் வாழ்ந்துவரும் பாட்டாளி மக்கள் —
புலம்பெயரா துழுதுழுது சாகின்ற உழவர் —
குழுச்சேர்த்துப் போராடி வெற்றிபெற எண்ணிக்
கூட்டணியொன் றமைத்துவிட்டோம்! இளைஞர்களே வருக!

அயல்நாட்டு வல்லரசின் மூலமுத லீடும்
அகநாட்டில் சுரண்டுகின்ற தரகுமுத லியரும்
வயல்நாட்டின் உழவர்களை நிலக்கிழமை யாரும்
வயிற்றடித்துத் தாம்கொழுக்கும் தன்மையெலாம் மாற்றும்
புயல்வேகப் புரட்சியொன்று புறப்பட்ட திங்கே,
பொதுவுடைமைத் தமிழகத்தை உருவாக்கல் வேண்டி!
மயலடிமைத் தனம்வீழ்க! கோழைத்தனம் வீழ்க!
மனவுறுதி கொண்டவரே! மறவர்களே! வருக!

பதவிவளம் அடிமைநலம் துய்க்கின்ற செல்வர்,
பாட்டாளி மக்களினைச் சுரண்டுகின்ற கயவர்,
உதவிசெயும் நோக்கமென ஊர்க்கொள்ளை யடிப்போர்,
உன்மத்தர், சட்டங்களை உடைத்துய்யும் திருடர்,
கதவிடுக்கில் ஒளிந்திருக்கும் அதிகாரக் கேடர்,
காமத்தைக் காசாக்கும் கலையுலகக் கீழோர்,
மதவிளக்கம் பலகூறி மக்களையிங் கேய்ப்போர்
மற்றிவரை அழித்தொழிப்போம்! வீரர்களே வருக!



Scanned with CamScanner

# நமக்கு வந்த மடல்கள்

0: 1034 : அன்புடையீர் அடியேனின் வணக்கம்; உங்க
ஆசிரிய உரைகண்டேன்; வாழ்க; நீவிர்
மன்பதையின் வளர்ச்சிக்கும் வாழ்வுக் கும்மே
மனத்தாலும் மொழியாலும் மெய்யி னாலும்
இன்பமதை எண்ணாமல் தொண்டு செய்யும்
எம்மவரே! பாவாணர் வழிவந் தோரே!
துன்பமுறத் தமிழுக்குக் கேடு செய்வோர்
தோலுரித்துப் பொய்க்கோலம் காட்டி னீரே!

அதிகாரப் போதையிலே உளறிக் கொட்டி
அமைச்சரெனத் திரிகின்ற தந்ந லத்தார்
'சதி'காரப் போக்கதனைச் சரியாய்ச் சொன்னீர்,
சம்மட்டி தனைக்கொண்டே அடித்தாற் போலும்!
புதுமையெனப் புரட்சியென ஆரிப் பரித்தார்!
பூத்துவரும் தமிழ்ச்செடியின் வேரிப் பறித்தார்!
அதிவிரைவில் அரசியலில் மாற்றங் காண்போம்!
அயராமல் தமிழுக்குத் தொண்டு செய்வோம்!


— பெ: இளவரசு கூ.மு;ஆ:ப, சென்னை-78

0: 1035 : பேரன்பு கெழுமிய பாவலரேறு ஐயா அவர்கட்கு எனது அன்பு வணக்கங்கள்.

தங்களைக் கடந்த மே திங்கள் பெண்ணாகடத்தில் நடந்த மாநாட்டில் நேரில் தங்களோடு அளவளாவியபோது, உங்கள் உள்ளக் கிடக்கைகளை அனுப்பிவையுங்கள் என்று கூறினீர்கள்... யான் இதுவரை, தமிழ்ச்சிட்டு ஐந்தும், தென்மொழி ஒன்றும், தமிழ்நிலம் ஒன்றும் ஆக ஏழு இதழ்கட்கு ஆண்டு உறுப்பினர் சேர்த்து அவ்வப்போது அனுப்பிவைத்துள்ளேன். அதை அனுப்பும் பணவிடைச் செலவும் நான் மேற்கொண்டு கடமை புரிகிறேன். எனது நண்பர் குழாம் அனைவருக்கும் இது பொருட்டு மடல்களில் குறித்தும் வருகிறேன். இன்றைய நாளில் ஈழத் தமிழர்கள் அழிந்து படுவதை யான் கேட்குந்தொறும் யான் அடையும் துயரத்திற்கு எல்லையும் உண்டோ?


உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் அமைத்து, தனது உடல் பொருள் ஆவி அனைத்தையும் தமிழுக்கும், தமிழினத்திற்கும் பாடுபடும் உங்களிடம் என் உள்ளக் குமுறலை வெளியிட்டுள்ளேன். ஒருவழிக் கடிதமாக உள்ளது. நான் ஓரிருமுறை விடுத்த கடிதம், கட்டுரைகளைத் தாங்கள் வெளியிடவில்லை; அதனால் எனக்கு ஓர் இயலாமை உணர்வு ஏற்படுகிறது. நான் தங்கள் மேல் அளவிலா பற்றுடையவன். ஆதலால் நான் விடுக்கும் மடலுக்குச் சிறியேன்மேல் அருள்கொண்டு உங்கள் மேலான விடையை எதிர்பார்க்கிறேன். தாங்கள் அளிக்கும் விடை எனக்குப் பெருணர்வை அளிக்கத் தமி[illegible] சிறு நன்மையாவது [illegible]

Scanned with CamScanner



“கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;” எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

[ நிறுவனம் தி. பி. 1990 (1959) ]




# தென்மொழி

மொழி — இனம் — நாடு.


**நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!**

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

---


பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரனார்

புரப்பாளர்கள் : தென்மொழி முல்லைவாணன், தென்மொழி ந. முத்துக்குமரனார், தென்மொழி, ப. துரையரசன் தென்மொழி நா. இளமாறன். தென்மொழி பழநி-மகிழ்நன்

(பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும் பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன.)

சுவடி: 2[1] உ௦கரு கன்னி [ செப் அக் -84’ ] [ஓலை - 3 1
துலாம் அக் - நவ் - 84


# கோழைத்தனங்களும் அடிமைத்தனங்களும்!



தமிழன் வீரத்தில் சிறந்தவன் என்று பெயரெடுத்தவன். கடந்த இரண்டாம் உலகப்போரில் பிரிட்டிசுப் படைக்கு மிகத் துணையாக நின்றவர்கள் சீக்கியர்களும் தமிழர்களுமே! அந்த நிலையில் இருந்தவன் இன்று வடநாட்டின் வல்லாண்மைக்கும் சூழ்ச்சிக்கும் அடிமையாகித் தில்லியரசுக்கு ஆலவட்டம் சுற்றிக் கொண்டிருக்கின்றான். சீக்கியர்களோ, தில்லியின் வல்லாண்மையிலிருந்து மீட்சிபெற்றுத் தனிநாடு கோரிக்கையை முன்வைத்து

விட்டனர். இவனோ இப்பொழுதைய நிலையில் படுகோழையாகி விட்டான்; படுஅடிமையாகி விட்டான்! இவனை அவ்வுணர்களி லிருந்து மீட்பது அருஞ்செயலாக உள்ளது. இந்த அரும்பெரும் முயற்சியில் தம் வாழ்நாள் முழுவதையுமே ஈடுபடுத்திய ஒரே தமிழினத் தலைவர் தந்தை பெரியாரே! ஆனால், அவர் வழியைப் பின்பற்றுவதாக இன்றைக்குக் கூறிக் கொண்டிருப்பவர்களோ, அவரைத் தங்கள் தனியுடைமை-உரிமையாக ஆக்கிக் கொண்டது மன்றி, அவர் இனமீட்புக்கும், இந் நாட்டு விடுதலைக்குமாகச் சேர்த்துவைத்த அரும்பெரும் ஈட்டத்தை வேறு எது எதற்கோ பயன்படுத்தித் தமிழ் மக்களுக்கு இரண்டகம் செய்து வருகின் றனர். தந்தை பெரியார் அந்த வகையில் பெரும் தவற்றைச் செய்துவிட்டார் என்பதை வரலாறு கூறாமல் போகாது. ஏனெனில்,

இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு

— என்னும் அரச இலக்கணம் பெரியாருக்கும் பொருந்தும். அவர் ஆட்சி செய்யவில்லையென்றாலும் தமிழினத்தைப் பொறுத்தவகை யில் அவர் ஓர் இனப்பேரரசர்! அந்த வகையில் அவர் வகுத்தல் தவற்றை ஏனோ செய்து, இந்த இனத்தின் மீட்சிக்குப் பெரும் பயன் விளையாமல் போன ஒரு பெரும் பிழையைச் செய்துவிட்டார். எனவே அவர் காலத்திலேயே விளைந்திருக்க வேண்டிய விளைவு, பின் தள்ளிப் போவதுமட்டுமன்றி, பின்னிறக்கம் கொள்ளவும் வேண்டியதாயிற்று. அவரின் தலையாய கோட்பாடுகள் என்று நாம் உணர்ந்தவை மூன்று. அவை பகுத்தறிவு, சாதிமத வொழிப்பு, தமிழ்நாட்டு விடுதலை. இவற்றுள்ளும் தலையாய கொள்கை தமிழ்நாட்டு விடுதலையே! இக் கொள்கை வெற்றி பெறுமானால், மற்ற இரண்டு கொள்கைகளும் செயற்படுத்தப் பெறுவது, மிகவும் எளிதாகப் போய்விடும்.

மேலும் இந்தக் கொள்கையைப் பெரியார் போலும் ஒரு துணிவான, தன்னலமற்ற தலைவரால்தான் கட்டாயம்செயற்படுத்த முடியும். அவர் மறைவதற்கு ஓர் ஐந்தாறு மாதங்களுக்கு முன், அவரை நான் திருச்சியில் பார்த்து, 'தமிழ்நாட்டு விடுதலைப் போராட்டத்தை இன்னும் தள்ளிப் போட்டுக் கொண்டு போவது அவ்வளவு நல்லதன்று; உணர்வேறிய மக்கள் உணர்வு குன்றிப் போய்விடுவரே. எனவே விரைந்து அப் போராட்டம் தொடங்கப் பெறுதல் வேண்டும். போராட்டத்தை ஐயா தொடங்கிவிட்டால் போதுமானது. பிறகு தானே வலுப்பெற்று விடும். ஒன்றால், ஐயா அவர்கள் தொடங்கட்டும்; நாங்களெல்லாம் தொண்டருக்குத் தொண்டராய் இருந்து செயல்படுகிறோம். இல்லையானால் நாங்கள் தொடங்குகிறோம்; ஐயா எங்களுக்கு வாழ்த்துக் கொடுத்து வழி காட்டட்டும்' என்று நேரிடையாகவே கேட்டேன். அதை மகிழ்ச்சி யோடும் அக்கறையோடும் கேட்டுக் கொண்டிருந்த பெரியார் அவர்கள் 'தாம் சென்னைக்குப் போனதும் விரைவில் போராட்டத் திற்கான நாள் குறிப்பதாகவும், அப்பொழுது' அங்கு வந்து தான்

கலந்து கொள்ளவேண்டுமென்றும் கூறினார்கள். அத்துடன் பக்கத்திலிருந்த மானமிகு வீரமணி அவர்களிடம், என் பெயரைக் குறித்துக் கொள்ளும்படியும் சொன்னார்கள். (திரு. வீரமணிக்கு இது நினைவிருக்குமோ என்னவோ ?)

இந் நிகழ்ச்சியையும் இதையொட்டிய செய்தியையும் எதற்காக இங்குக் குறிப்பிடுகிறேன் என்றால், காலம் இனி போகப் போக நமக்கு இசைவாக இருக்கும் என்று கூற முடியாது. வடநாட்டவர்கள், குறிப்பாக இந்திரா பேராயக்கட்சியினர் இந்தியா முழுமையையும், தங்கள் முற்றுருமை அதிகாரத்தின்கீழ்க் கொண்டு வரப் பெருமுயற்சி எடுத்து வருகிறார்கள். நாம் அஞ்சுவதற்கு ஒன்றுமே இல்லாத நெருக்கடி நிலைக் காலத்திலேயே; கையில் தூக்கித் தோள்மேல் வைத்திருந்த தமிழ்நாட்டுக் கொள்கையை, அச்சத்தினால் தூர வீசியெறிந்து விட்டோம். இனி, வருங்காலமோ, இத்தகையவர்கள் துணிவுகொள்ளவே முடியாத காலமாக இருக்கும் போல் தெரிகிறது. இந்திராகாந்தி குடியரசுத்தலைவர் ஆட்சிக்கு அடிவகுத்துக் கொண்டுள்ளது அனைவரும் அறிந்ததே. அப்படிப்பட்ட நிலையில், இங்குள்ள, இன்றைய இனத்தலைவர்களும், அரசியல் தலைவர்களும் எப்படி நடந்துகொள்வார்கள் என்று சொல்ல முடியாது. ஏனெனில் அவர்கள் தனித்தமிழ் நாட்டுக் கொள்கையைத் தவிர்த்து, மாநிலத்தன்னாட்சிக் கொள்கைக்கு எப்பொழுதே இறக்கம் காட்டிவிட்டனர். உண்மையைச் சொல்ல வேண்டுமானால், இம் மாநிலத்தன்னாட்சிக் கொள்கையைத் தில்லி அரசுதான் நம்மிடம் ஒப்புரவுக்காகப் பேசவேண்டும். நாமாக இக் கொள்கையைப் பேசக்கூடாது. தில்லிக்காரர்கள் இந்த நாட்டின் நலங்கள் அனைத்திலும் வல்லாண்மை செலுத்திக் கொண்டிருக்கும் இவ் வேளையில், நாம் வெறும் மாநிலத்தன்னாட்சி பெற்று நிறைவடையும் நிலையில் இருக்கக்கூடாது. தனித்தமிழ் நாட்டுக் கோரிக்கைதான் நம் இனத்துக்கும், மக்கள் நலத்துக்கும் காப்பானது; சரியானது.

நாம் ஒன்றும் ஆளத்தெரியாத இனத்தைச் சேர்ந்தவர்களல்லர். ஆண்ட இனத்தவர்கள். அப்படிப்பட்டவர்கள், அரசியலிலும் பொருளியலிலும், குமுகாயநிலையிலும் இன்று அடிமைகளாகவும், ஏழைகளாகவும், இழிவானவர்களாகவும் ஆக்கப்பட்டிருக்கிறோம். ஒண்ட வந்த இனம் ஊராள்கிறது. ஊராண்ட இனம் இன்று ஒண்ட இடம் கேட்கிறது; கோழைத்தனம் தவிர இதற்கு வேறு காரணம் இருக்கமுடியாது. இன்று நம் நாட்டில் உள்ள நம் தலைவர்களெல்லாரும், அரசியல் நடத்துகிறார்கள். அவர்கள் ஒரு நாளெல்லாம் பேசுகிற பேச்சிலும், எழுத்திலும், 50 விழுக்காடு எதிர்க்கட்சிகளைக் குற்றம் காண்பதிலும் குறை கூறுவதிலுமே கழிகிறது. 25 விழுக்காடு தில்லியரசுக்குச் சார்பாக இயங்கி, அடுத்த தேர்தலில் தாம் ஆட்சிக்கு வரும் முயற்சிகளிலேயே கழிகிறது. மீதியுள்ளதில் 10 விழுக்காடு, தங்களுக்குக் கிடைக்கும் விளம்பர ஆரவாரங்களைப் பற்றியும், 10 விழுக்காடு தாங்கள் பதவியில் அமர்த்தப்பெற்றால் என்னென்ன செய்வோம் என்னும்

கற்பனைக் கனவிலுமே கழிகின்றன மீதியுள்ள 5 விழுக்காடுதான் இந் நாட்டு மக்களைப் பற்றிப் பேசுகிறார்கள். (கணக்காசிரியர் யாராவது கணக்குப் போட்டுப் பார்க்கட்டும். அப்பொழுதுதான் நாம் சொல்வது உண்மையா, பொய்யா என்பது விளங்கும்.)

எதற்காக இவ்வளவு வருத்தமான செய்தியை, இவ்வாறு வெளிப்படையாகக் கூறுகிறோம் என்றால், இந் நாட்டின் நிலை அவ்வாறு கொடுமை வாய்ந்ததாக உள்ளதால் எவ்வாறேனும், தமிழின மக்களைத் தட்டியெழுப்பி, அக்கொடுமையிலிருந்து தம்மை மீட்டுக்கொள்ள, விடுவித்துக்கொள்ள, மக்கள் தழுவிய ஒரு போராட்டத்தை இத் தமிழ்நாட்டிலும் தொடங்க வேண்டும் என்பதற்காகத்தான்.

நம் முன்னணித் தலைவர்கள் ஒவ்வொருவரும் பெரும் பெரும் முதலாளிகள் ஆகிவிட்டார்கள். அச் செல்வப்பெருக்கம் அவர் களைக் கோழைகளாகவும், அச்சமுள்ளவர்களாகவும் ஆக்கியிருக் கிறது. விடுதலைப் போராட்டம் போன்ற உயிரீகப் போராட்டங் களில் ஈடுபட்டால், எங்குத் தாங்கள் தங்கள் உடைமைகளை ஈட்டங்களை இழந்து விடவேண்டியிருக்குமோ என்று அஞ்சிச் சாகிறார்கள். ஆனாலும் மக்களிடத்தில் உள்ள தங்கள் சாய்கா லும், தங்கள் மேல் அவர்கள் வைத்த நம்பிக்கையும் போய்விடக் கூடாதே என்பதற்காக, அவர்கள் ஏதோ ஒன்றிரண்டு இடங்களில் தமிழ்மொழியைப் பற்றியும் தமிழ் இனத்தைப் பற்றியும், பேசித் தங்கள் பதவி, அதிகாரத்திற்குத் துணைவராத தில்லி ஆட்சியைப் பற்றியும் கண்டிக்க வேண்டி உள்ளது. மற்றபடி, தில்லியாட்சி நாளைக்கே இவர்களின் பதவியாசை அங்காப்புகளுக்குத் துணை வருவதாக இருக்குமானால், இவர்களின் தமிழ்மொழி, தமிழ்இனம், தமிழ்வரலாறு பற்றிய பேச்சு, அளவிலும் வலிவிலும், கோரிக்கை களிலும் மிக மிகத் தாழ்ந்துவிடும். இவையெல்லாம் கடந்தகால நடவடிக்கைகளிலிருந்து நமக்குக் கிடைத்துள்ள பட்டறிவுகள். எனவே, இவர்கள் இனிமேலும் நம் மொழி இன, நாட்டுத் தேவை களுக்கும் அவற்றின் விடிவுக்கும் பயன்படுவார்கள் என்று நம்பிக் கிடப்பது நம் கோழைத்தனத்தையும் அறியாமையையும் அடிமைத் தனத்தையுமே காட்டும். தமிழினம் தான் இழந்துபோன வரலாற் றையும் வரலாற்றுச் சிறப்பியல்புகளையும் மீட்டெடுக்க வேண்டு மானால், தமிழகம் தனியாக ஆட்சியமைப்பதே தக்கது.

திருவாட்டி இந்திராகாந்தி அம்மையார் தாம் மிகவும் வலிவு பெற்ற நிலையில் தம் இன ஆளுமையே என்றென்றும் இந்தியாவில் நடைபெறவேண்டும் என்பதற்கான அடிப்படைகளை மிகவும் தந்திரமான முறையில் ஏற்படுத்தி வருகிறார். தமிழ்மொழிச் சிறப்பியல்கள் சமசுக்கிருதமொழிச் சிறப்பியல்களாக மாற்றப் பட்டு வருகின்றன. தமிழ்க்கலைகளின் வடிவங்கள் முழுவதும் ஆரியக் கலைகளாக மெருகுதீட்டப் பெற்றுவருகின்றன. தமிழரின் பண்பாடுகள் ஆரியப் பண்பாடுகளாகச் சமைத்து, உலகெங்கும் பரப்பப்படுகின்றன. தமிழரின் வீரவரலாறுகள் கரவாக மறைக்கப் படுகின்றன. (இதற்கோர் எடுத்துக்காட்டு அண்மையில் நடந்த

தமிழ்நிலம், தென்மொழி, தமிழ்ச்சிட்டு, உ.த.மு.க, நூல்கள், கூட்டநிகழ்ச்சிகள் ஆகியவை தொடர்பான மடல்கள், தொகைகள் அனுப்பும்

# அன்பர்கள் கவனிக்கவும்!

---

அன்பர்கள் மடல்கள் எழுதுகின்றபொழுது பலவாறான செய்திகளையும் ஒரே மடலில் அல்லது ஒரே தாளில் எழுதி விடுகிறார்கள். இம்முறை அலுவலக நடைமுறைக்கு மிகவும் இடர்ப்பாட்டை விளைவிக்கின்றது. எனவே இனிமேல் நம் அலுவலகத்திற்கு மடல் எழுதும் அன்பர்கள் கீழ்க்காணும் நடைமுறையைத் தவறாமல் கடைப்பிடிக்குமாறு வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறோம்.

1) பொறுப்பாசிரியர் பெருஞ்சித்திரனார் அவர்களுக்கான தனிச் செய்திகள் (குடும்பநலத் தொடர்புகள், கூட்டத் தொடர்புகள், தனியாகத் தெரிவிக்கக் கருதும் செய்திகள்) ஆகியவற்றைத் தனி மடல்களாக எழுதவும். இவற்றுள் இதழ்கள், இயக்கங்கள் தொடர்பான வேறு எந்தச் செய்தியையும் எழுத வேண்டா.

(பின்பக்கம் பார்க்க)

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்ச்சியை வைத்தே காட்டலாம். இரண்டு மாதங்களுக்கு முன் நடந்த இராசஇராசன் விழாவில் அம்மையார் பேசிய பேச்சில், 'கங்கை கொண்ட சோழன்' என்னும் அடைமொழியில் உள்ள அரசியல் வீர வரலாற்றை, 'கங்கை நீரைக் குடங்களில் கொண்டுவந்து, கோயிலிலுள்ள தெய்வச் சிலையைக் குளிப்பித்தான்—குடமுழுக்குச் செய்தான்-என்பதாகப் பேசி,மத வரலாறாக மாற்றியதைப் பலரும் உணர்ந்திராமல் இருக்கலாம்.)

இவ்வாறு தமிழின வரலாறே 'பாரத'க் கூப்பாட்டுக்குள்ளும் தேசிய ஒருமைப்பாட்டுக்குள்ளும் அடியோடு மண்மேடிட்டு மறைக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் சிறுசிறு நலன்களுக்கென்று,நம் தமிழினத் தலைவர்கள்(!) இந்திய அரசிடம் கோரிக்கைகள் விடுப்பதும். மாநாடுகள் கூட்டி, ஊர்வலங்கள், பேரணிகள் நடத்துவதும், தீர்மானங்கள் போடுவதும். அவற்றின் செலவுகளுக்கென்றும், போராட்ட வழக்குச் செலவுகளுக்கென்றும் மக்களிடம் இலக்க இலக்கமாகப் பணத்தைச் சுரண்டுவதும், கொடுமையிலும் கொடுமையாக நடந்துவரும் செயல்களே ஆகும். இவற்றுக்கெல்லாம் நம் அடிமைத்தன உணர்வுகளும் கோழைத்தனமுமே காரணங்களாகும். இற்றை நிலையில் நாம் போடத்தக்க ஒரே தீர்மானமும் கோரிக்கையும் 'தனித் தமிழ்நாடு வேண்டும்' என்பதே! இக் கோரிக்கையை எழுப்ப இக்கால் முன்வரும் தலைவர்களையே நம் இனத்திற்காகப் பாடுபட முன்வந்தவராக நாம் கருதுதல் வேண்டும்.

— பெருஞ்சித்திரனார்.

2) உ.த.மு.க இயக்கம் தொடர்பான அனைத்துச் செய்திகள் தொடர்பாகவும் முதல்வர்க்கு எழுதும் மடல்களைத் தனியாகவே அல்லது தனித் தாளிலேயே எழுத வேண்டும்.

3) இனி, தமிழ்நிலம், தென்மொழி, தமிழ்ச்சிட்டு ஆகியவை தொடர்பான, உறுப்பாண்மை விளக்கம், முகவாண்மைத் தொடர்புச் செய்திகள், கட்டுரை, பாடல்கள் அனுப்புதல் தொடர்பான செய்திகள், இதழ்களில் வெளிவந்த உருப்படிகள் பற்றிய திறனாய்வு மடல்கள், ஆசிரிய மடல்கள் ஆகியவை அந்தந்த இதழ் ஆசிரியர்க்கான தனித்தனி மடல்களாகவே எழுத வேண்டும். ஓரிதழ்ச் செய்திகளைக் கட்டாயம் பிறிதோர் இதழ்ச் செய்திகளை எழுதும் மடலில் இணைக்கவே கூடாது. தேவையானால், தொடர்புக்குரிய செய்திகள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு தனித் தாளில் எழுதி ஒரே உறையில் இட்டு அனுப்பலாம்.

4) அதேபோல், ஒவ்வோரிதழ்க்கான தொகைகளையும் (அன்பளிப்புகள் உட்பட) கட்டாயம் தனித்தனியே அனுப்புதல் வேண்டும். ஆனால், பணவிடைக்கழிவு, கூடுதல் பணி என்பவை கருதி, ஒரே பணவிடையில், தெளிவான விளக்கத்துடன் அனுப்பலாம். ஆனால் இதழ்த் தொகைகளுடன் நூல்கள் தேவைக்கான தொகையோ, ஆசிரியரின் கூட்ட நிகழ்ச்சித் தொகைகளையோ கட்டாயம் சேர்த்து அனுப்புதல் கூடாது. பணவிடை தவிர, வரைவோலை (Demand-Draft) அனுப்புபவர்களும் இம்முறையையே கடைப்பிடித்தல் வேண்டும். காசோலைகளை (Cheques) அனுப்பவே வேண்டா.

5) அனுப்பப்பெறும் பணவிடைகளின் அடியில் உள்ள, கத்தரித்துக் கொள்ளப்பெறும், செய்தி விளக்கக் கிழிப்பத்தில் (Coupon) கட்டாயம் அனுப்புபவரின் முழு முகவரியையும் (அஞ்சல் குறிப்பெண் உட்பட) குறித்தல் வேண்டும். அவர் வேறு எவருக்காகவோ தொகையை விடுப்பதாயிருப்பின், தொகைப் பணவிடைகளில் அவர் பெயருடன், இதழ் அனுப்பப்படவேண்டியவர் பெயரும் கட்டாயம் குறிப்பிடப் பெறுதல் வேண்டும்.

6) நூல்களுக்காக அல்லது நிகழ்ச்சிகளுக்காக எழுதும் மடல்கள், பணவிடைகள் கட்டாயம் தனி மடலாகவோ தொகையாகவோதாம் நூல்கள் அனுப்புச் செலவுடன் விடுக்கப்பெறுதல் வேண்டும்.

7) இங்குக் குறிப்பிடப்பெற்றுள்ள செய்திகளை நன்கு கவனித்து அனுப்பப்பெறுதவர்களின் சார்பில் எந்த மடலுக்கும் பணவிடைக்கும் உரிய நடவடிக்கைகளில் காலந்தாழ்வும், அல்லது தவறுதல்களும் நேரும் என்பதை அன்பர்கள் கட்டாயம் உணர்தல் வேண்டும்.

அலுவலக மேலாளர்,

தென்மொழி

# தென்மொழி, தமிழ்ச்சிட்டு நிலைப்பாட்டு முயற்சிகள்!

தென்மொழி சுவடி – 20, ஓலை 5-6-இல் வெளியிடப்பெற்ற அறிக்கையின்படி, தென்மொழி, தமிழ்ச்சிட்டு நிலைப்பாட்டு முயற்சிகளுக்குத் துணையாக நின்றுதவிய அன்பர்களின் பெயர்ப் பட்டியல்கள் கீழே கொடுக்கப்பெறுகின்றன.

1. வாழ்நாள் உறுப்பினர்கள் பட்டியல் :

தென்மொழி

| | | | |
|---|---|---|---|
| 5 | கொ. பரமசிவம், | அத்தனூர் | 200.00 |
| 16 | இரா. நெடுமாறன், | மயிலாடுதுறை | 200.00 |
| 17 | வெ. சே. அருணாசலம், | சென்னை | 200.00 |
| 18 | ம. இரமணன், | சென்னை | 200.00 |
| 19 | த. கரிகாலன், | முசிறி | 200.00 |
| 20 | இராம. அருணாசலம், | மேட்டூர் அணை | 200.00 |
| 21. | புஞ்சை செல்வராசன் | அப்துல்லாபுரம் | 200-00 |

தமிழ்ச்சிட்டு

| | | | |
|---|---|---|---|
| 9 | அழகு நிலவன், | புதுக்கோட்டை | 120.00 |
| 10 | கொ. பரமசிவம், | அத்தனூர் | 120.00 |
| 11 | இரா. நெடுமாறன், | மயிலாடுதுறை | 120.00 |
| 12 | வெ. சே. அருணாசலம், | சென்னை | 120.00 |
| 13 | ம. இரமணன், | சென்னை | 120.00 |
| 14 | த. கரிகாலன், | முசிறி | 120.00 |
| 15 | இராம. அருணாசலம், | மேட்டூர் அணை | 120.00 |

(இடமின்மையால் முழுப் பட்டியலும் வெளியிட இயலவில்லை. அடுத்த இதழில் முழுமையும் இடம் பெறும்.)

---

(அட்டை 4-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

நிலையத்தார்க்கு ஒரு மடல் விடுத்திருந்தேன். அவர்களும் இசைவு தந்து நாளைப் பின்னர் தருவதாகக் கூறினர். எவ்வாறேனும் தங்கள் கருத்துகள் தமிழர்களிடைப் பரவவேண்டுமென்பது என் பேரவா. எனவே இதற்கு இசைவளித்து எனக்கு வாழ்த்துக் கூற வேண்டுமென்று தமிழ் மீதூர்ந்த பற்றின் காரணியமாக விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுப்பிலும் தங்கள் தொடரின் சுருக்கம்தான் இ'து என்று எழுதவும் தவறவில்லை.

— தென்மொழி அன்பன், இரா. மனோகரன்,
பொத்தியபாளையம், காங்கயம்.

(ஆசிரியர் குறிப்பு : நம் கருத்துகளை மக்களிடம் பரப்பும் செய்தி கண்டு மகிழ்கிறேன். தமிழுக்கும் தமிழினத்திற்கும் ஆக்கந் தரும் எந்த முயற்சிக்கும் என் முழு ஆதரவு உண்டு. கட்டுரை, நூலாக வந்தபின் என் பார்வைக்கு இரண்டு படிகளை விடுத்து வையுங்கள் அதுபோதும். உங்கள் அன்புக்கும் ஆர்வத்திற்கும் நன்றி — பெருஞ்சித்திரன்.)

Scanned with CamScanner

சிறப்பு மடல் :

# பர்மாவாழ் தமிழ்நெஞ்சம் வாழ்த்துகிறது!

எங்கள் பெருமதிப்பிற்குரிய பாவலரேறு ஐயா அவர்களுக்கு, வணக்கம் பல.

தங்களை அடிக்கடி சந்தித்து உரையாடுவது பற்றி என் தம்பி இரவி எழுதியிருந்ததைப் படித்து மிக்க மகிழ்வுற்றோம்.

தங்களின் தமிழேடுகளான தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் ஆகியவை எங்களுக்கு அவ்வப்போது கிடைக்கும். படித்து இன்புறுவோம். அதன் மூலம் தங்களின் அளவுகடந்த (அதீத) தமிழ்பற்று, துணிவு, புலமை, நேர்மை முதலிய அறிந்து வியப்பும் மகிழ்ச்சியுமடைவோம். தங்கள் ஏடுகள் உணர்ச்சியற்றவனையும் தமிழ்ப்பித்தனுக்கிவிடும்; கோழையையும் வீரனாக்கிவிடும் திறன் கொண்டவை. அவை காந்தசுங்கள். தொட்டவனைப் பற்றிவிடும் ஆற்றலுடையவை.

தங்களுக்கு மடல் தீட்ட பலமுறை முயன்றும், ஊர் பெயர் தெருப்பெயர், இல்லாததால் போய்ச்சேராது என எங்கள் தந்தை தடுத்து, போடமுடியாமல் செய்துவிட்டார்.


'தங்களால், தங்கள் வழித்தோன்றல்களால்தாம், தமிழுலகம் மீண்டும் மறுமலர்ச்சியடைய முடியும்; பழம் பெருமையை மீட்க முடியும்'. என்பது என் போன்றவர்களின் கருத்தாகும். வாணிகச் சந்தைக்கு விலையாகிப்போகும் இன்றைய எழுத்தாளர்கள், மாந்த மெலிவுகளைப் பயன்படுத்தி, இளம் தலைமுறையினரைப் படுகுழிக்கு இழுக்கும் திரைப்படம் முதலியவற்றால் நம் இனமே இன்று சீர்குலைந்து நிற்கிறது. இதைத் தடுத்து நிறுத்த உங்களால், உங்கள் நண்பர்கள்தாம் முடியும் என்பதால் இதைத் தடுத்து நிறுத்துங்கள் தமிழினத்தைக் காப்பாற்றுங்கள் எனப் பெரிதும் வேண்டிக்கொள்கிறேன்.

தாங்கள் பர்மாவுக்கு வரவிருப்பதாக, தம்பி இரவி எழுதியிருந்தான். அதைப் படித்துப் பெரிதும் மகிழ்ந்தோம். தங்களைக் காணும் பேறு கிடைக்கப்போகிறது எனும் எண்ணமே எல்லையற்ற மகிழ்ச்சியைத் தருகிறது. இப்போது இங்கு மழை அதிகம். கோடையில் வரவும். அதற்கான ஏற்பாடுகளை இங்குள்ளவரைக் கொண்டு செய்தபின் எழுதுகிறோம்.

பர்மாத் தமிழரிடையே 'தென்மொழி' மிகவும் போற்றப்படும் ஓர் ஏடு. தென்மொழி நின்றுபோகப் போவதாக, ஓர் ஏட்டில் படித்துத் துயருற்றோம். நல்ல ஏடுகளுக்கு நாட்டில் வரவேற்பு இல்லையே! கெட்டவையே இன்று ஆட்சிசெய்கிறதே எனத் துடித்தோம். நிறுத்தாமல் தொடர்ந்து நடத்த வேண்டுகிறோம்.

தங்களின் அரும்நற்றமிழ்ப்பணி தொடர எங்கள் வாழ்த்துகளைத் தெரிவிக்கிறோம். இப்படிக்கு,

— சௌ. பா. சேது, இரங்கூன், பர்மா.



# நூறாசிரியம்

பெருஞ்சித்திரன்

பாட்டு : ௫௭

இவனியா ரென்குவி ராயி னிவனே
தாறலை பாகர் தந்துயர் பொருஅது
ஊறுதக நினைக்கும் உயவல் யானை
கையுகத் தறைந்து கால்தலை நெறிக்கு
மெய்யே போலும் பொய்சேர் கொற்றம்
வழங்குமொழி உலப்ப இலங்கில் வறுமொழி
பாரிப் புடன்று நூறப் புக்க
கொலைகோற் காவலர் குறிகொள் எஃகம்
அதிரப் படர்ந்தா ராக
எதிர்தலைப் பட்ட எம்மாண் மகனே !

பொழிப்புரை :

இவன் யார் என வினவுவீராயின், இவனே, தம் கைகளில் உள்ள கோட்டியினால், தன்னைத் துன்புறுத்தும் யானைப்பாகரின் துயரத்தைப் பொறுத்துக் கொள்ளாமல் தன்னைத் துன்புறுத்தியவர்க்குத் தானும் துன்பம் செய்ய மிகுதியும் கருதுகின்ற மதங் கொண்ட யானை, தன் தும்பிக்கையை நீட்டி அவரை எடுத்துக் கீழே அறைந்து, தன் காலில் அவர் தலையை நசுக்கிச் சிதைக்கின்ற உண்மையைப்போல, பொய்யே நிறைந்த அரசு, முன் வழக்கில் உள்ள தமிழ்மொழியைக் குழப்புகின்ற நிலையில், சிறப்பில்லாத எளியமொழியாகிய இந்திமொழியை வளர்த்துப் பரப்புவதை எதிர்த்துப் போராடி அழித்திட (மாணவர்கள்) முயல, (அவர்களைத் தடுக்குறும் நோக்கத்துடன்) கொலையுறச் செய்யும் கோலைக் கொண்ட காவலர்கள், குறிவைத்தவாறு வேட்டெஃகம் தாங்கி, அஃது அதிரும்படி சுட்டுக்கொண்டே பரந்து வந்தாராக, அவர்கள் முன் எதிர்ந்துபோய் இறந்துபட்ட மாட்சிமை பொருந்திய எம் ஆண்மகனே!

விரிப்பு : இப் பாடல் புறத்துறையைச் சார்ந்தது.

அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவன் இளங்கோ மருந்தகத்துத் துஞ்சினனாக, அவனை யாரென விளித்த அயலார்க்கு, அவன் நற்றாய் சொல்லியது.

'இவனியார் என்குவீ ராயி னிவனே...... கொலைகோற்

காவலர் குறிகொள் எஃகம் அதிரப் படர்ந்தாராக, எதிர்தலைப் பட்ட எம் மாண் மகனே' — என்றும்,

'தாறலை பாகர் தந்துயர் பொருஅது ஊறுதக நினைக்கும் உயவல் யானை, கையுகத் தறைந்து கால்தலை நெறிக்கும் மெய்யே போலும்...... நூறப் புக்க' — என்றும்,

கொண்டு கூட்டிப் பொருள் கொள்ளுக.

இப்பாடல் முன்னைய பாடலின் தொடர்ச்சி.

காலமும் சூழலும் முந்தைய பாடல்களுள் கண்டுகொள்க.

இவனியார் என்குவீர் ஆயின் : (இதோ இங்கு இறந்து கிடக்கும்) இவன் யார் என்று வினவுவீர் ஆயின்.

தாறு அலை பாகர் தம் துயர் பொருது : தாறு (கோட்டி—அங்குசம்) கொண்டு, குத்தித் துன்புறுத்தும் யானைப் பாகரின் துன்பத்தைப் பொறுத்துக் கொள்ளாமல்.

ஊறுதக நினைக்கும் உயவல் யானை : தம்மைத் துன்புறுத்தியவர்க்குத் தானும் துன்பம் செய்ய மிகுதியும் நினைக்கின்ற மதங் கொண்ட யானை.

கை உகத்து அறைந்து : தன் தும்பிக்கையை உயரத்தூக்கித் (தன் மேலே ஏறியிருந்த பாகனைப் பற்றியெடுத்துத் தரையில் வீசி) அறைந்து.

கால் தலை நெறிக்கும் : காலால் தலையை நசுக்கிச் சிதைக்கும்.

மெய்யே போலும் : உண்மையான நடைமுறை போல.

பொய்சேர் கொற்றம் : பொய்யைக் கூறும் பொய்யர்களையே சேர்ந்திருக்கும் இவ் வரசு.

பொய்யைக் கூறுவது, 'இந்தி படித்தால் ன்மை வரும், ஒருமை வளரும், வேலை கிடைக்கும்' என்றவாறு என்க.

வழங்குமொழி உலப்ப : வழக்கில் உள்ள தமிழ் மொழியைக் குழப்பிச் சீரழிக்க.

இலங்கில் வறுமொழி பாரிப்பு : சிறப்பில்லாத-விளக்கமில்லாத, வறிய—எளிய மொழியாகிய இந்தியமொழியை வளர்த்துப் பரப்புவதை.

உடன்று : மாறுபட்டு) எதிர்த்துப் போராடி.

நூறப் புக்க : அழித்தற்கு (மாணவர்கள்) முயற்சி செய்ய.

கொலைகோல் காவலர் : கொலைகளைச் செய்யும் கோல்களை உடைய காவலர்கள்.

குறிகொள் எஃகம் அதிர : (மாணவர்கள் முயற்சியைத் தடுக்

கும் நோக்கத்துடன்) குறி வைத்தவாறு வேட்டெஃகத்தைத் தாங்கி, அஃது அதிரும்படி, சுட்டுக் கொண்டே.

படர்ந்தாராக : பரந்துபட்டு வந்தாராக.

எதிர் தலைப் பட்ட எம் மாண் மகனே! : (அவ்வாறு வந்த காவலர்கள் முன்னம்) எதிர்ந்து போய் இறந்து பட்ட மாட்சிமை பொருந்திய எம் ஆண் மகனே, இவன்!

எம் என்றதால் தந்தையும் உடனிருந்தது பெறப்பட்டது.

பாகன் தன்னைக் கோட்டியால் துன்புறுத்தியதால், யானை மிக்க சினம் கொண்டது. எனவே மதங் கொண்டது. உடனே தன் முதுகில் ஏறியிருந்த பாகனைத் தன் தும்பிக்கையை நீட்டி, வாரித் தரையில் அறைந்து கொன்று, தலையை மிதித்துத் துவைத்தது.

அதுபோல் இந்திமொழி என்னும் கோட்டியால் அடிக்கடி துன்புறுத்திய பொய்யர் சூழ்ந்த அரசைச், சினங்கொண்ட மாணவர் துவைத்தெடுக்க போர்க்கோலம் பூண்டனர்—என்று உவமையை ஒருபுடைப் பொருத்திப் பொருள் கொள்க.

'அடர்ந்தெழுந்த சினங்கொண்ட மாணவர் எழுச்சியைத் தடுத்து நிறுத்தும் பொருட்டுக் காவலர்கள், குறிவைத்தவாறு வேட்டெஃகம் தாங்கிப் படர்ந்து வந்தனராக, அவர் முன்னம், அஞ்சாமல் எதிர்ந்துபோய், அக் குண்டடிபட்டு இறந்து பட்ட மாட்சிமை பொருந்திய எம் மகன், இவன்' என்று அவனைப் பெற்ற நற்றாய், அவன் யார், ஏன் இறந்தான் என்று கேட்ட அயலார்க்கு இஃது உரைத்தனள் என்க.

இப்பாடல் முன்னது திணையும், மாண்மகன் துஞ்சல் என் துறையும் என்க.

திணையும் துறையும் புதியன. o


# "தென்மொழி"

சென்னை-5.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்
ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல்நாளன்று வெளிவரும்.

| | உள்நாடு | கொழும்பு | வெளிநாடு |
|---|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் : | 15 உருபா | 35 உருபா | 40 உருபா |
| அரையாண்டுக் கட்டணம்: | 8 ,, | 18 ,, | 25 ,, |
| தனியிதழ் : | 1.25 ,, | 3-00 ,, | 4.00 |

ஒரிதழுக்கு உருபா 2-50 மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக்கேட்க!

# தமிழ்ப் பேராசிரியராக
# பா. ஆறு அழகப்பன் அமர்த்தம்!



அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியராகக் கலைமாமணி பண்டாரகர் ஆறு. அழகப்பன் அவர்களை அமர்த்தம் பெற்றுள்ளார். தமிழ்த்துறையில் ஏற்கனவே உ.வே.சா, சோமசுந்தரபாரதி, பண்டிதமணி மு. கதிரேசனார், விபுலானந்த அடிகள், தெ. பொ. மீனாட்சிசுந்தரம், அ. சிதம்பரநாதனார், வ. சுப. மாணிக்கம் முதலிய பன்னிரு பேராசிரியர்கள் பணியாற்றியுள்ளனர். முறையாகத் தமிழ் கற்று வளர்ந்த திரு. ஆறு. அழகப்பன் அவர்கள் நாட்டுப்புறஇயல், நாடகஇயல் இவற்றில் ஆய்வு செய்து பட்டங்கள் பெற்றவர். தமிழக அரசு—இவரது நாடகப் பணியைப் பாராட்டிக் கலைமாமணி விருது அளித்தது. பல நாடுகளுக்குச் சென்ற பட்டறிவு உள்ளவரும் எண்ணற்ற நூல்களின் ஆசிரியருமான ஆறு. அழகப்பன் அவர்கள் சென்னையில் உள்ள தமிழ் மற்றும் இந்திய மொழிகள் ஆய்வு நிலைய இயக்குநருமாகச் சிறந்த பணியாற்றியுள்ளார். கடந்த 25 ஆண்டுகளாகத் தொடர்ந்த தமிழ்ப் பணி செய்துவரும் இவருக்குக் கலைக்காவலர், தமிழ் அண்ணல், தமிழ்த்தூதுவர், அருந்தமிழ்ச்செம்மல் முதலிய பட்டங்களைப் பல்வேறு நிறுவனங்கள் கொடுத்துச் சிறப்பித்திருக்கின்றன; ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டில் தமிழன்னைக்கு ஓர் உருவம் கண்ட பெருமையும் இவருடையது. இவரது 'திருமலைநாயக்கர்' நாடகத்தை—தி. எரான். இராமசாமி—மேடை நாடகமாகச் சிறப்பாக அரங்கேற்றி வருகிறார். வளரும் அறிவியல் அறிவுடன் பழமையான தமிழும் தன்னை வளர்த்துக் கொண்டு செல்வ மொழியாக வேண்டும், மரபு பிறழாப் படைப்பிலக்கியங்கள் தமிழில் தோன்ற வேண்டும் என்ற குறிக்கோள்கள் கொண்ட இவர், ஆண்டுதோறும் ஆகத்து 15-ஆம் பக்கலன்று நடுவண் சிறைச்சாலைச் சிறையாளிகளுக்குக் கலைநிகழ்ச்சி நடத்துவதும், அங்குள்ள நூலகங்களுக்கு நூல்கள் அன்பளிப்புச் செய்வதனையும் குமுகாயத் தொண்டாகக் கொண்டு வருகிறார்.

பா. ஆறு. அழகப்பன் தொடர்ந்து இந்திய மொழிப் புலத் துறை முதன்மையராகவும் ஆட்சிக் குழு உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

— நம் செய்தியாளர்.

Scanned with CamScanner

# தமிழினம்

## தாழ்ச்சியும் வீழ்ச்சியும் மீட்சியும்

— இரணியன் —

அடிமை மனப்பாங்கும் ஆரியமயமாக்கமும் :

தமிழர்களுக்கு எப்போதும், "1. தன்னை; 2. தனதை' த் தாழ்த்திக்கொள்ளும் மனப்பாங்குகள் மிகுதி.

புதிதாக வந்தவன் பகைவனுயினும், அவனைத் தன்னினும் உயர்ந்தவனுகக் கருதும் மனநிலை தமிழர்க்கு இயல்பானது! இதனுல், தமிழகத்தைச் சூறையிட வந்தவனெல்லாம், இங்கே வீர மாந்தனுய் வழிபடப்படுகிறுன்!

அவன் எதைஎதைக் கைப்பற்றினுலும், தமிழர்கள் பெருந் தன்மையுடன் விட்டுக்கொடுத்தனர்!

பேச்சு, நடை, உடை, செய்கை, அனைத்தும் தனக்குப் புறம்பாக இருப்பதை, மாற்றுனல் பின்பற்றப்படுவதைத் தமிழன் உயர்வாக மதிப்பான்! தனக்குரிய எதையும் தாழ்வாகக் கருதுவான்!

இதனுல்தான் 1300 ஆண்டுகட்கும் மேலாகத் தென்னகம் ஆரியமயப்படுத்தப்பட்டு வருவது எளிதாக நடைமுறைப் பட்டுள்ளது!

இந்த ஆரியமயமாக்கத்தின் வெற்றிதான் தமிழின் கிளை மொழிகளான தெலுங்கும், கன்னடமும், படகும், குடகும் தனி மொழிகளானது! தனிச் செந்தமிழ்மொழியான சேரநாட்டுத் தமிழ் தனிமொழியானதுடன், சமற்கிருதக் கலப்பை அதிகமாய் ஏற்றுக் கொண்டது!

மொழி நிலையில் ஆரியமயமாக்க முயற்சி இன்று நேற்று ஏற்பட்டதா?

பல்லவர் காலத்திலேயே அரசுமொழியாகச் சமற்கிருதம் ஆகி விட்டது! பிற்காலச் சோழர்காலத்திலும் வடமொழியே அரசுமொழி! பின்னர் வந்த ஆட்சிகள் அனைத்திலும் தமிழல்லாத பிறமொழிகளே அரசின் மொழிகளாய்த் திகழ்ந்தன! தமிழரின் ஒப்புதல் இன்றியே தமிழரை ஆரிய வைதிகச் சமயத்தவராக்கி, ஆரியமொழி சமய மொழி ஆக்கப்பட்டது! மேல்தட்டு மக்களான மன்னர், அமைச்சர், ஆண்டைகள், செல்வர் அனைவரும் சமற்கிருதத்தில் பெயர் சூட்டிக் கொண்டனர்! அவர்தம் பட்டங்கள் யாவும் சமற்கிருத மொழி யிலேயே இருந்தன!

Scanned with CamScanner

தமிழ் ஒடுக்கப்பட்டவர்களின் குடிசைகளில் மட்டுமே அடைக்கலம் புகுந்திருந்தது!

**விழிப்பின்மையும் தெளிவின்மையும் :**

இனி, தமிழர்களுக்குத் தமது நாடுபற்றிய சிந்தனை எக்காலத்திலும் இருந்ததில்லை! சில ஊர்த்தொகுதிகளை, சிறு பரப்பை மட்டுமே, ஆளுவோர் தம் நாடு என்று கருதினர். மக்களுக்கு அந்தச் சிந்தனையும் இருந்ததில்லை!

எங்கே உழைக்கப் போனாலும், தாம் பிழைக்க வந்ததாகவே தமிழர்கள் கருதினர்! பிற நாட்டவர்களால் தமது நாடு பறிக்கப்பட்டபோது, பிற இனத்தவர்கள் தமக்கு உரிமையாக்கிக் கொண்டபோது, தமிழர்கள் அதனைப் பொருட்படுத்தியதே இல்லை!

வெள்ளையர்கள் வந்து 200 ஆண்டுக்காலம் "உனது நாடு இந்தியா, உனது நாடு இந்தியா" என்று செவிகளுக்கு அருகில் பெருங்கூச்சல் இட்டபின்,

சிந்தித்துப் பழக்கமில்லாத, கண்களைத் திறப்பதில் விருப்பம் இல்லாத தமிழன் "ஆமாம் எனது நாடு இந்தியா! எனது நாடு இந்தியா!" எனத் திருப்பிக் கூச்சலிட்டான்! கூச்சலிட்டபோதும் தமிழனின் கண்கள் மூடியேதான் கிடந்தன!

ஆக, தமிழரின் தாழ்ச்சிக்குரிய பழைமை வாய்ந்த காரணிகளாக, சாதியமுறை, ஆரிய வரவேற்பு, ஆரியமயமாக்கம், தமிழ்ப் புறக்கணிப்பு, தமது நாடுபற்றிய சிந்தனையின்மை, அயலான் கூறியவற்றை ஆராயாது ஏற்றல் என்பனவற்றை காண நேர்கிறது!

**நேற்று - நாம், நம் தலைமை, நம் வீழ்ச்சி :**

இப்போது நாம் ஆங்கில ஆட்சிக்காலத்தினுள் வந்துவிடுவோம். ஆங்கிலேயர் தமிழகம் உள்ளிட்ட இந்தியா முழுமையையும் தம் சுரண்டுகளமாக்கி, இந்தியத் துணைக்கண்டத்துச் செல்வங்களைக் கொள்ளையிட்டபோது, ஆங்கிலரை அகற்ற வேண்டும் என்பதற்கான போராட்டம் இந்தியா முழுவதும் தலையெடுத்தது! இந்தியத் துணைக் கண்டத்தின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தலைவர்களும் தம்தம் மக்களிடையே விடுதலை உணர்வை ஊட்டினர். இந்த 'விடுதலை' என்னும் நோக்கம்' இந்தியத் துணைக் கண்டத்து நாடுகள் அனைத்திற்கும் பொதுவானதாக இருந்தது! இப் பொது நோக்கத்தை முன்னிட்டு, இந்தியத் துணைக் கண்டம் முழுமையிலும், சில ஒற்றுமையான செயல்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இந்த ஒற்றுமையான செயல்திட்டத்தையும், "விடுதலை" என்னும் பொது நோக்கத்தையும் ஓர் அரிய வாய்ப்பாகப் பயன்

Scanned with CamScanner

படுத்திக் கொண்டு, ஆரிய இந்துநெறியையும் அகன்ற இந்து பாரதத்தையும் நிறுவிவிட வேண்டும் என வடநாட்டுப் பிராமணர்கள் திட்டமிட்டனர். தொலை நோக்கான திட்டங்களுடன், நுட்பமான செயல் நடைமுறைகளுடன் அவர்கள் பாடாற்றியதால், வீடண பிரகலாதக் கும்பல்களின் அளப்பரிய துணை அவர்களுக்குக் கிடைத்தது.

இந்த அகன்ற இந்துபாரத உருவாக்கத்தின் மூலம், ஆரிய எதிர்க்கருத்துப் பள்ளிகள் தகர்க்கப்படுவதற்கும், சமன்மைச் சிந்தனையால் சுரண்டல் செல்வர்களுக்கு ஏற்படும் ஊறுபாடுகள் தடுக்கப்படுவதற்கும், இந்தியாவினுள் எக்காலத்தும் பொதுவுடைமை அமைப்பு மலர்ந்து விடாமல் நச்சு மருந்து தெளிக்கப் படுவதற்கும் இந்த அகன்ற இந்துபாரதம் தேவையாய் இருந்தது!

இந்தத் தேவையை நிறைவேற்றிக் கொள்வதற்காக அவர்கள் மேற்கொண்ட உழைப்பு வீண்போகவில்லை.

இப்போது நாம் தமிழகத்திற்கு வருவோம்!

ஆங்கிலரை அகற்றுவதற்காக உழைத்த தமிழர் தலைவர்களாக நம் கண்களுக்குத் தெரிபவர்கள், சிறுத்தைத் தமிழர் செண்பகராமன், கப்பலோட்டியதமிழர் வ.உ.சிதம்பரனார், தமிழ்த் தென்றல் திரு.வி.க. முதலானவர்கள்.

இவர்கள் இந்தியா முழுமைக்கும் வழிகாட்டிகளாய் அமைந்த மாபெரும் தலைவர்கள், ஆங்கிலப் பேராட்சிக்குக் கிலியூட்டிய செயல் திட்டங்களையும், நாவன்மையையும், மக்கள் மதிப்பாண்மையையும் கொண்டவர்கள்! தமிழிடத்தும் தமிழர் நலன்களிலும் மிகுந்த நாட்டம் உடையவர்கள்!

இந்த விடுதலை ஆரிமாக்களுக்குத் தம் நாடு எஃது என்பது பற்றிய தெளிவு இருந்திராததால், இவர்தம் நிகரற்ற விடுதலைப் போராட்டங்களெல்லாம் பயனேதும் அற்றுப்போயின.

'இந்திய விடுதலை' என்ற பிழையான கண்ணோட்டத்துடன் இவர்கள் இயங்கி, வரலாற்றில் மின்மினிகளாய் மறைந்து விட்டனர்!

அடுத்து -

'தமிழர் நலம்' என்பதில் நாட்டம் கொண்ட வேறொரு பிரிவினர், ஆரியச் சூழ்ச்சியை அறிந்திருந்தாலும், வடபுல மேலாண்மையால் தமிழர்க்கு வரும் ஊறுபாட்டை உணர்ந்திருந்தாலும், இவற்றிலிருந்து தென்னகத்தைக் காப்பதற்காக ஆங்கிலச் சார்பாளராக மாறிப் போயினர்! குமுகாய மடமைகளை, வாழ்வியல் அறக் கேடுகளை ஒழித்துக் கட்டுவதற்காக ஆங்கிலருடன் இணக்க

மாகச் செயல்பட்டனர்! இந்தப் போக்கானது, இவர்களை, 'ஆங்கிலக் கைக் கூலிகள்' என எதிரிகள் இகழ்ந்துரைப்பதற்கு ஏற்ற வாய்ப்புகளை உருவாக்கித்தந்தது. இதனால், விடுதலை நாட்டம் கொண்ட வெகுமக்கள் "அகன்ற ஆரிய இந்துபாரதம்" விரும்பும் அனைத்திந்தியத் தலைமையை ஏற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கு உட்பட்டார்கள்! தமிழர் தலைவர்களும் தமிழர் இயக்கங்களும் தமிழரை ஆரியத் தலைமைக்குள் கொண்டு செலுத்தி விட்டன!

## விடுபட்டுப் போனது எது?

இந்த இருதிறத்துத் தமிழர் நலத் தலைவர்களும் எதனைச் செய்திருக்க வேண்டும் என்பதையும் நாம் மனத்திற்கொள்வது, நம் எதிர்கால ஆக்க வினைகட்கு நன்மை தருவதாகும்.

ஆங்கிலச் சுரண்டலாட்சிக்கு எதிரான போர் என்பது ஒரு வரலாற்றுக் கட்டாயம்! தமிழர்க்குக் கிட்டவேண்டிய சில எளிய நன்மைகளைக் கருத்திற்கொண்டு தமிழர் தலைவர்கள் ஆங்கிலருக்கு இணக்கமானவர்களாக மாறிப்போனது, துன்பந்தரும் நினைவாகும்!

விடுதலைப்போரில் பங்குபற்றிய தமிழர் தலைவர்கள் தம் நாட்டு - தமிழ்நாட்டு விடுதலையை நாடாமல், தமிழர்க்குத் தமிழ்த் தேசிய உணர்வை ஊட்டாமல், தாயகம் பற்றிய தெளிவு இல்லாமல், அனைத்திந்திய விடுதலை என்பதாகவும், இந்தியா ஒரு நாடு என்பதாகவும் செயல்பட்டது நமக்கு மிகப்பெரும் தீமை பயந்து விட்ட செயல் முறையாகும்

உண்மையில் தமிழர் நலம்விழைந்த தலைவர்கள், முதற்கண் "நாம் தமிழர் - நமது மொழி தமிழ் - நம் நாடு தமிழகம்" என்னும் உணர்வுகளைத் தமிழ்மக்களுக்கு ஊட்டியிருக்க வேண்டும்! தமிழர்க்குப் பகையான ஆற்றல்கள் எவைஎவை என்பதைத் தமிழர்க்கு இனங்காட்டியிருக்க வேண்டும். தமிழகத்தைத் தன்வயப் படுத்திய ஆங்கில ஆட்சிக்கு எதிரான போருக்கு மக்களைத் திரட்டி நடத்தியிருக்க வேண்டும்!

இந்தியா - இந்தியர் எண்ணங்கள் உட்புகாதவாறு, வலுவான செயலும் சிந்தனையும் கொண்டு, இயங்கியிருக்க வேண்டும். முதற்கண் ஆங்கிலரிடத்திலிருந்து அரசியல் நெறியில் தமிழகத்தை விடுவித்திருக்க வேண்டும்.

இந்தியத் துணைக் கண்டத்தில் பல்வேறு நாடுகளும் அடிமைப் பட்டிருந்தன என்பதால், இவை யாவும் ஒன்றாகி, இவற்றுள் ஒன்றின் தலைமையைப் பிற யாவும் ஏற்றுத்தான் விடுதலையை ஏந்த வேண்டும் என்பது என்ன முறைமை?

தமிழகம் தனது விடுதலைக்காக, ஆங்கிலப் பேரரசையும் ஆரியக் காட்டரசையும் எதிர்த்துப் போராடி இருக்குமானால், தமிழர்

Scanned with CamScanner

தலைவர்கள், தமிழர் இயக்கங்களின் வழிகாட்டுதல் இதற்குக் கிடைத்திருக்குமானால், இந்தியாவின் பிறபகுதிகள் விடுதலையை ஏந்துவதற்கு முன்பே தமிழ்நிலம் விடுதலையை ஏந்தியிருக்கும்! நாம் இன்று ஏக்கப்பெருமூச்சு விட வேண்டிய தேவையும் ஏற்பட்டிராது!

எழுதற்கரிய வீழ்ச்சி :

நாம் 'இந்தி'ய ஆட்சிக் காலத்தினுள் நுழைகிறோம்.

வரலாறறிந்த, தமது வாழ்நிலையை அறிந்த, உலக நடப்புகளை உணர்ந்த தமிழன், தனது தாயக விடுதலையின்மேல் நாட்டம் அற்றவனாக ஒரு போதும் இருக்க மாட்டான்!

தமிழகத்தில், நாட்டு விடுதலை உணர்வு ஏதோ ஒரு வகையில் துளிர்விட்டுக்கொண்டே இருந்துவந்துள்ளதை வரலாற்றில் காண்கிறோம்!

ஆங்கில ஆட்சியின் இறுதிக்காலத்தில், இந்த உணர்வு பேரளவில் வளர்ந்து, 'இந்தி'ய ஆட்சிக்காலத்தில் செழித்துக் கிளைக்கலாயிற்று!

இந்த உணர்வே திராவிட இயக்கங்களின் வளர்ச்சிக்கும் வலுப்பாட்டிற்கும் முழுமுதற்காரணமாகும்!

ஆனால், இந்த உணர்வை ஊட்டி வளர்த்த தலைவர்கள், தமக்குச் சில நெருக்கடிகள் வந்தபோது, அலுக்கம் உறாத தம் பொது வாழ்வுக்குச் சில ஊறுபாடுகள் ஏற்பட்டபோது, தம் எதிர்காலக் கனவுகள் துன்பத்துக்குள்ளாகுமோ என இவர்கள் ஐயுற்றபோது, அந்த ஒப்பரும் விடுதலை உணர்வை 'வீதி'யில் கிடத்திக்,கால்களால் மிதித்துக் குரல்வளையைத் திருகிக் கொன்று சிதைத்தனர்!

இதைத் தாழ்ச்சி எனலாமா? வீழ்ச்சி எனலாமா? விளங்க வில்லை!

உலகின் எப்பகுதியிலும், ஒரு நோக்கத்தை அடைவதற்குத் தான் இயக்கங்கள் சமைக்கப்பட்டுள்ளனவே தவிர, இயக்கங்களைக் காப்பதற்காக நோக்கத்தை - கொள்கையை உதறியதாக வரலாறு கூறவில்லை! இந்தத் தவறான எடுத்துக்காட்டு 1962 இல் தமிழகத்தில் நிகழ்ந்தேறியது!

இத்தகைய தாழ்ச்சி நிகழ்வுகளோ தமிழினத்தை மாபெரும் வீழ்ச்சிக்கு உட்படுத்தியவை! — (தொடரும்)

Scanned with CamScanner

# பெருள்ளத்தை விளங்கிக்கொள்ளும் ஒரு பேருள்ளம்!

வணக்கத்திற்குரிய ஐயா! மகிழ்ந்து வணங்குகின்றேன்! யான் தொடக்கக் காலந்தொட்ட தென்மொழித் தொண்டன் எனினும் இதுகாறும் தென்மொழிக்கு மடல் விடுத்ததில்லை. மகிழ்வோன் பிழை நின் கரணியமாய்த் தங்கட்கு இம்மடலை விடுக்கின்றேன். காணின் மன்னியுங்கள்.

இத் திங்கள் வெளிவந்த சுவடி: 20 ஓலை: 11 தென்மொழியைக் கண்ணுற்றேன். அதில் உண்மைத் தென்மொழி அன்பர் கரூர். திரு. பர். சி. இராமச்சந்திரன் அவர்களின் மடல்கண்டு மட்டில்லா மகிழ்வுற்றேன். 'கருவூரிலேயே வதிந்துகொண்டு இத்தகைய உண்மைத் தென்மொழி அன்பரின்-உருபா: 1001/-ஐ நன்கொடை யாகக் கொடுத்த உண்மை அன்பரின் அறிமுகம் இல்லாதிருந்து விட்டோமே' என எண்ணி வெட்கமுற்றேன்.

தென்மொழிக்கு ஆண்டுக்கட்டணம் மட்டும் செலுத்திவிட்டு (அதையேனும் செலுத்தினரே!) தென்மொழில் தம் பெயர் வரல் வேண்டும், 'பா' வரல்வேண்டும், தென்மொழியாரிடம் அணிந்துரை பெறல்வேண்டும், 'தாம் கொள்கை உரவோர்' எனப் பீற்றிக் கொள்ளல் வேண்டும், தமக்குத் தென்மொழியாரோடு தொடர் புண்டு என்பதைப் பறைசாற்றிப் பகட்டுச்செய்து கொள்ளல் வேண்டும் என்றெல்லாம் எண்ணித் தங்களுக்கு மடல் விடுக்கின்ற, எழுத்துக்கும், பேச்சுக்கும், வாழ்வுக்கும் ஒட்டுறவில்லா வாய்ப்பு சான்ற போலிகளை இவண் கண்டுள்ளேனே அல்லாது பெயர் விரும்பா அந் நன்னெஞ்சை, உண்மைத் தென்மொழி நெஞ்சை, கொடைவளங்கொண்ட கொள்கை நெஞ்சைக் கண்டேனில்லை! அதனை எண்ணுங்கால் 'தென்மொழித் தொண்டினை இன்னும் செவ்வையாய்ச் செய்யாதுள்ளோமோ' என நினைந்தேன்! மேலும் வெட்கினேன்!

விரைந்தே அப்பேருள்ளத்தைக் கண்டறிந்து மகிழ்ந்து. தென்மொழித் தொண்டின் முடுக்கத்திற்கு மேலும் ஆக்கம் சேர்ப்பேன். இத்தனை ஆண்டுகளாயும் தென்மொழிக்கென மடல் விடுக்காத யான், கரூர். திரு. பர் சி இராமச்சந்திரனாரைப் பாராட்ட வேண்டுமென்கின்ற பேரார்வப் பேராவலால்தான் இம்மடலை விடுக்கின்றேன். என் வலிவுக்கேற்பத் தென்மொழி புரப்பேன் என உறுதிகூறி முடிக்கின்றேன். வணக்கம்.

தங்கள், — கருவூர்பாரி, கரூர்—5

---

**அன்பர்கள் கவனிக்க..**

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டுபேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாள்களில் மாலையில் 5 மணிக்கு மேல் வருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

.— அமைச்சர்.

ஒரு பட்டறிவாளர் மடல்!

# பெரும் கருத்துப்போர் நடைபெற்றுத்தான் ஆகவேண்டும்!

மதிப்பிற்குரிய பாவலரேறு ஐயா அவர்களுக்கு வணக்கம் பல. ஐயா.

தங்கள் தென்மொழி, தமிழ்ச்சிட்டு ஆகிய இரு இதழ்களும், தொடர்ந்து நடைபெறச் சில வழிமுறைகள் கூறியிருந்தீர்கள். அது மிக வரவேற்க வேண்டிய ஒன்றே. ஏனென்றால் இன்றைய காலகட்டத்தில் இவைபோலும் இதழ்கள் மேலும் பல தோன்றுதல் தேவை. நிலை அவ்வாறிருக்க இருக்கும் இதழே ஆதரவின்றி நிறுத்தப்படும் நிலை ஏற்பட்டால், அது தமிழுக்குப் பெரிய தாக்கமாகவே அமையும், எனவே, உணர்வுள்ள ஒவ்வொருவரும் முழுமுயற்சி எடுத்துக்கொள்வது முகாமையான செயலாகும். இதில் உணர்வுடைய ஆசிரியர்கள் பெரும் பங்காற்றமுடியும். ஒவ்வொரு பள்ளியிலும் உள்ள ஆசிரியர்கள் தங்கள் தலைமையாசிரியரின் உதவியுடன் நன்கு செயல்படலாம். இவ்விதழ்கள் இலக்கிய இதழ்கள்; இவ்விதழ்களைப் பள்ளிகளில் வாங்க மறுக்க எவ்வகைக் கரணியமுமில்லை. இன, மொழி, எதிர்ப்பாளர்கள் வேண்டுமானால் எதிர்க்கலாம்.

அகவை கடந்தவர்களிடம் கொள்கைகளை எடுத்துச் செல்வதைவிட, இன்றைய இளைஞர்களிடம் எடுத்துச் செல்வது பயனளிப்பதாக இருக்கும். ஆனால் தாங்கள் தென்மொழியில் வெளிப்படுத்தியது போல், இன்றைய அறிஞர்களின் அறிவெல்லாம், தமது இல்லம் என்ற எல்லைக்குள்ளேயே அடங்கிவிடுவதைக் காண்கிறோம். அதற்கும் மீறிச் சென்றால், ஏதோ மேடையில் நான்கு சொற்களைப் பேசுவதோடு நின்றுவிடுகிறது. நம்மால் முடிந்ததை இந்த இன, மொழி மேம்பாட்டிற்காகச் செய்வோம் என்ற உணர்வே பெரும்பாலோருக்கு இல்லை. 'அன்பின் விழையார் பொருள் விழையும் ஆய்தொடியார்' என்றாற்போல எந்தச் செயலாக இருந்தாலும் பொருள் நோக்கமே முகாமை பெற்று விட்டது.

எமது பள்ளியின் தலைமையாசிரியர் நல்ல உள்ளம் கொண்டவர், எனவே அவரது இசைவு பெற்றே சென்ற இரண்டு ஆண்டுகளாகத் தமிழ்ச்சிட்டு, தென்மொழி முதலிய இதழ்களை மாணாக்க மாணாக்கியர் வாங்கிப் படிக்குமாறு ஊக்கி வந்துள்ளேன். ஆசிரியர்கள் எடுத்துக்கூறி விளக்கினால் பலர் அவ்விதழ்கள் வாங்க முன்வருவார் என்பது திண்ணம். அந்த அளவிற்கு ஆசிரியர்கள் உணர்வு பெற்றவர்களாக இருப்பதில்லை. ஒருவரே வாங்கக்கூடிய அளவிற்கு வாய்ப்பு அற்றிருக்கலாம். இருந்தாலும் பலர் சேர்ந்து வாங்கவைக்கலாம். எமது பள்ளியில் பத்துப் பத்துப்பேர் சேர்ந்து ஓர் இதழ் வாங்குகின்றனர். இவ்வாறு தமிழ்ச்சிட்டு 11 தென்மொழி 10 வாங்குகின்றனர். இதனால் அவர்களுக்குச் செலவு குறைவதோடு பலர் படிக்கின்ற வாய்ப்பும் பெறுகின்றனர்.

Scanned with CamScanner

# நெருக்கம் இல்லை ! (?)

— பாவலர். தமிழியக்கன்

முன்னுக்குப் பின்முரணாய் மொழிதல் இல்லை;
    முன்னிறுத்திப் புகழ்பாடும் முறையும் இல்லை;
பின்னுக்குப் புறங்கூறும் பிழையும் இல்லை;
    பெருமைக்குப் பிதற்றுகிற பெற்றியில்லை;
புன்மைக்கு மெருகேற்றும் புரையும் இல்லை;
    புலன்சாய்க்கும் பொச்சிறுப்பால் பொங்கல் இல்லை;
நன்மைக்கு நாநீட்டி நரித்தல் இல்லை;
    நான்அதனால் யார்க்குமிங்கே நெருக்கம் இல்லை.

கெட்டாரைச் சிதைந்தொழியச் செடுத்தல் இல்லை;
    கேள்வியினைப் பிறிதொன்றாய்க் கிளத்தல் இல்லை;
அட்டாரைப் பழிதீர்த்தற் கடுதல் இல்லை;
    ஆண்மையெனப் பின்னிருந்தே ஆற்றல் இல்லை;
இட்டாரை இடைமறித்தே இடித்தல் இல்லை;
    ஈவதிலே சாதிநிலை எண்ணம் இல்லை;
நட்டாரை நடைமாற்றி நலித்தல் இல்லை;
    நான்அதனால் யார்க்குமிங்கே நெருக்கம்இல்லை.

(முன் பக்கத் தொடர்ச்சி)

நடுநிலைப்பள்ளிகளில் தமிழ்ச்சிட்டு வாங்கலாம்; உயர்நிலை, மேல்நிலைப்பள்ளிகளில் தமிழ்ச்சிட்டும் தென்மொழியும் வாங்கலாம். இவ்வாறு செய்வதால் மாணாக்கர்களிடம் நல்ல மொழி வளத்தை எதிர்பார்க்கலாம். இத்தகைய செயல்களைச் செய்யக்கூட ஆசிரியர்கள் பொறுப்பேற்க முன்வருவதில்லை. இதில் மொழியாசிரியர்கள் பெரும் பங்காற்றலாம். ஆனால் இன்று தமிழகத்தில் உள்ள ஆசிரியர்களில் மொழியாசிரியர்கள் உட்பட எத்தனை பேர் மொழி, இன உணர்வுடையவர்களாக இருக்கிறார்கள்? அவர்களின் உணர்வுகளெல்லாம் தமிழ் பிழைப்பிற்கு ஒரு கருவியாக இருக்கிறது என்பதோடு நின்றுவிடுகிறது. உணர்வுடையவர்கள் முயன்றால்கூட ஓரளவு பயனைப்பெறலாம். இந்த இருபதாம் நூற்றாண்டில் கற்றவர்கள் தங்கள் அறிவையும், உழைப்பையும் சிறிதளவு மொழி, இனநலனுக்குச் செலவழித்தால் கூட, எவ்வளவோ முன்னேற்றம் ஏற்பட்டுவிடும். திரைப்படம், இழிந்த இதழ்கள் இவற்றை மனமுவந்து ஏற்கின்றனர். பண்பை வளர்க்கும் இதழ்களைக் கவனிக்கத் தவறுகின்றனர். குமுகச் சூழலும் அவ்வாறு உள்ளது. இவை மாற, பெரும் கருத்துப்போர் நடைபெற்றுத்தான் ஆகவேண்டும். மொழி, இனநலம்கருதி என்னால் இயன்றவற்றைச் செய்துவருகிறேன். இனிமேலும் செய்ய அணியமாகவே உள்ளேன். அன்பன்

— புலவர். அறிவுடைநம்பி, மூலனூர்

Scanned with CamScanner

நினைவுக்கு நிழல்தேடி அலைதல் இல்லை;
நெட்டுயிர்த்துப் பிறர்கண்டு புலம்பல் இல்லை;
தினவுற்றுப் பொருள்தேடித் திரிதல் இல்லை;
திண்ணைப்பேச் சுலகத்தில் திளைத்தல் இல்லை;
கனவுக்குப் பொருள்தேடிக் களைத்தல் இல்லை;
கண்டபொருள் தெளியாமல் கதைத்தல் இல்லை;
நனவுக்கு நாள்தேடி நடத்தல் இல்லை;
நான்அதனால் யார்க்குமிங்கே நெருக்கம் இல்லை.

சலுகைக்கும் சாதியின்பேர் கூறல் இல்லை;
சழக்கான மதத்தின்பேர் சாற்றல் இல்லை;
வலிமைக்குச் சாதியினை வளைத்தல் இல்லை;
வாய்ப்புக்காய் இனங்காட்டும் வழக்கம் இல்லை;
பொலிவுக்காய்ப் புறங்காத்துப் போற்றல் இல்லை.
பொறுப்பற்றே என்கடமை பொதுக்கல் இல்லை;
நலிவுக்காய் அஞ்சிமனம் நலிதல் இல்லை;
நான்அதனால் யார்க்குமிங்கே நெருக்கம் இல்லை.

தோள்கொடுத்துக் கழுத்தறுத்துத் துய்த்தல் இல்லை,
தூண்டிவிட்டுத் தூள்படுத்தும் துணிச்சல் இல்லை;
வாள்கொடுத்த கைகளையே வகிர்தல் இல்லை;
வளமொழியைப் பிறர்மாய்க்க வாழ்தல் இல்லை;
கோள்கொடுத்துக் குழிபறிக்கும் குறையும் இல்லை;
குண்டுபோட்டு நடுங்கவைத்துக் குழப்பல் இல்லை;
நாள்கொடுத்தே இழுத்தடிக்கும் நடத்தை இல்லை;
நான்அதனால் யார்க்குமிங்கே நெருக்கம் இல்லை.

மன்றுதொட்ட நெறிவிட்டுக் குனிதல் இல்லை;
மண்ணடிமைக் குதவிமனம் மகிழ்தல் இல்லை;
தொன்றுதொட்ட நன்மரபைத் துறத்தல் இல்லை;
தொடைதட்டி எளியாரைத் துவட்டல் இல்லை;
அன்றுதொட்ட பண்பாட்டை அழித்தல் இல்லை;
ஆரியத்தை வழிபட்டே ஆர்த்தல் இல்லை;
நன்றுதொட்ட பகுத்தறிவை மறுத்தல் இல்லை;
நான்அதனால் யார்க்குமிங்கே நெருக்கம் இல்லை.

தடுமாறும் அரசியலில் தலையீ டில்லை;
தகவில்லாச் செயற்பாட்டை மதித்தல் இல்லை;
மடுமாறும் ஆற்றைப்போல் மாற்றம் இல்லை;
மயக்கத்தைத் தருவதிலே மனமும் இல்லை;
உடுமாறும்! உள்ளநெறி உலைதல் இல்லை;
ஊருக்கோர் உரைவழிகண் டுவத்தல் இல்லை;
நடுமாறி ஓரம்போய் நகைத்தல் இல்லை.
நான்அதனால் யார்க்குமிங்கே நெருக்கம் இல்லை.

Scanned with CamScanner

நோக்கினிலே உரிமைநிலை நொடித்தல் இல்லை;
 நொய்யரிசி போற்கொதித்துக் குதித்தல் இல்லை!
போக்கினிலே பகுத்தறிவைப் புதைத்தல் இல்லை;
 புரட்டுருட்டுச் செய்துநலம் புரத்தல் இல்லை.
மூக்கினிலே நெய்தடவி முகப்புண் ஆக்கி,
 முகர்பூனை வருந்துசெயல் முனைப்பும் இல்லை;
நாக்கினிலே தேன்தடவி நடித்தல் இல்லை;
 நான்அதனால் யார்க்குமிங்கே நெருக்கம் இல்லை;

படைமறைத்துப் பாசமெனப் படிதல் இல்லை;
 பகட்டினிலே வாழ்வுநெறி பரப்பல் இல்லை;
கடைமறைத்துத் தலையாட்டும் கடப்பாடில்லை;
 கதைகட்டிக் கரிபூசும் கயமை இல்லை;
இடைமறித்து நலம்திரிக்கும் இயல்பும் இல்லை;
 எழுத்ததனை ஆள்நோக்கி ஏற்றல் இல்லை;
நடைமறைத்து நடுவுரைப்பார் நடத்தல் இல்லை;
 நான் அதனால் யார்க்குமிங்கே நெருக்கம் இல்லை.

மொழிசாய்க்கும் சிறுமைநெறி முனைதல் இல்லை;
 முடப்பனையாய் வாழ்வுதனை முடக்கல் இல்லை;
வழிசாய்க்கும் அடிமையென வளர்தல் இல்லை;
 வட்டமிட்டுக் குடிகெடுக்கும் வழக்கம் இல்லை
சுழிசாய்க்கும் போக்கினிலே சுணங்கல் இல்லை;
 சொறிந்துவிட்டு நலந்துய்த்துச் சுற்றல் இல்லை;
இழிசாய்க்கும் பணிக்கென்றும் இளைத்தல் இல்லை;
 இவற்றாலே யான்எவர்க்கும் நெருக்கம் இல்லை.

---

சொல்லாய்வறிஞர் ப. அருளி அவர்களின்
தமிழ் வளர்ச்சிக்கு ஒரு புத்தாக்க நூல்!

**இவை தமிழல்ல**

(அயற்சொல் அகராதி)

விலை: 10-00; அஞ்சல் செலவு: 1-00; பதிவஞ்சல் செலவு: 5-00

**இந்திய அரசே இன்னுமா உறக்கம்?**

(இலங்கைத் தமிழரின் அவலநிலை விளக்க நூல்)

விலை: 5.00; அஞ்சல்செலவு: 00; பதிவஞ்சல்செலவு : 5.00

அறிவன் பதிப்பகம்: 2/5, காளிகோயில்தெரு, தமிழூர்-புதுச்சேரி-9.

Scanned with CamScanner

# நிலவிலே கள்ளன்

— நாடக ஆசிரியர் : அதியமான்

தேவேந்திரன் : அஃதாவது நம் கலைமகளிடம் கூறி அவர்களுக்கு அறிவே வரவிடாதபடி செய்யக் கல்வி வளர விடாதபடி செய்துவிட்டால் என்ன?

நாரதர் : உங்களுக்கு அதுபற்றி தெரியாதுபோலும். நம் கலைமகளுடைய வேலையைச் சொல்லுகிறேன்; கேளுங்கள். கலைமகள் விழாவை மறக்காமல் தமிழ்நாட்டிலும், இந்தியாவிலும் ஆண்டுதோறும் நடத்துகிறார்கள். அவ்வகையில் நடத்தும் இந்தியாவில் படித்தவர்கள் நூற்றுக்கு முப்பத்தைந்து பேர், கலைமகள் என்றால் யார் என்றே தெரியாத நியூசிலாந்தில் படித்தவர்கள் நூற்றுக்குநூறு. ஆத்திரியாவில் நூற்றுக்கு நூறு படித்தவர்கள். பெல்சியம் நாட்டில் படித்தவர்கள் நூற்றுக்கு நூறு. பிரான்சில் கற்றவர்கள் நூற்றுக்கு நூறு. இங்கே வந்த கள்ளர் நாடு அமெரிக்காவில் படித்தவர்கள் எண்ணிக்கை நூற்றுக்குத் தொண்ணூறுபேர்.

தேவே : அஃதென்ன அந்த அம்மா அப்படிச் செய்திருக்கிறார்? எவ்வளவு முட்டாள்தனம்!

நாரதர் : முட்டாள்தனம், கலைமகளுக்கன்று; நீங்கள் சொன்ன முட்டாள்தனம், இந்தியாவிலும் தமிழ்நாட்டிலேயுந்தான் இருக்கிறது. இவ்வுளவுநாளும் இவ்விரண்டு நாடுகளுக்கும் கலைமகளால் ஒருபயனும் இல்லை, இதை அவர்கள் கண்டு கொள்ளவே இல்லையே! அதற்குக் கலைமகள் என்ன செய்வாள்? இன்னொன்று தெரியுமா தேவா. கேளுங்கள். மண்ணில் மாந்தர்களுடைய அகவைகளை உறுதிப்படுத்தி எழுதிவைப்பது சித்திரப்புத்திரன்தானே. அவர் எப்படி எழுதியிருக்கிறார் தெரியுமா? அமெரிக்காக்காரனுடைய வகுசரி (சராசரி) அகவை எழுபத்தைந்து. சித்திரபுத்திரனுக்கு விழா நடத்தும் இந்தியர்களுடைய வகுசரி அகவை இருபத்தெட்டு

தேவே : சே! நம்மவர்களுக்கு ஓரவஞ்சனைச் செயல் எவ்வளவு இருக்கிறது. இனிமேல் நம்மவரை அழைத்து இப்படியெலாம் செய்வது தவறு என்று உணர்த்தவேண்டும். நம்மை மறக்காமல் இருக்கும் இந்தியர்களுக்கே நாம் துணையாக இருக்க அறிவுரை கூறவேண்டும்.

நாரதர் : தேவரே, நமக்கு விழா எடுக்கக்கூறுவது யார்? நாமா? அவர்கள் அவ்வகையில் கூத்தாடுவதற்கு நாமென்ன செய்ய முடியும்? நாம் சொன்னாலும் அவர்கள் கேட்கமாட்டார்கள். ஏன்தெரியுமா? நம்முடைய பெயரைச் சொல்லிப் பிழைக்கும் கூட்டம் அவர்களைச் சிந்திக்கவிடமாட்டார்கள். நம்மைப் பற்றி அச்சமூட்டும் பல வரலாறுகளைப் பொய்கட்டிக் கூறி

விட்டார்கள். அதனால் அந்த மக்கள் தங்களைப் பல துன்பங்களிலிருந்து மீட்டுக்கொள்ள இப்படி விழா எடுத்து நாள்களையும் பணத்தையும் பாழடிக்கிறார்கள். எத்தனையோ சீர்திருத்தக்காரர்கள் இவைபற்றிய அறிவுரைக் கருத்துகளைக் கூறியும் அம் மக்கள் கேட்பதே இல்லை.

தேவே : ஓகோ அதற்கு நாம் ஒன்றுஞ்செய்ய முடியாது. அவர்கள் இங்கு வருவதுபோல, நாம் அங்கு சென்று நம்மைப்பற்றிய வரலாறுகள் பொய்யென்று கூற நம்மிடத்தில் அறிவியல் கருவிகள் இல்லையே!

நாரதர் : அமெரிக்காக்காரனுக்கு மூளை வேலை செய்வதுபோல நம்முடைய மூளையும் வேலைசெய்வது கிடையாதே.

தேவே : அப்படி வேலைசெய்தால்தான் அவர்களை வரவிடாதபடி தடைச் சுவர் கட்டிவிடலாமே, முடியவில்லையே! அதனால் தான் நான் மிகமிகக் கவலைப்படுகிறேன். நாரதரே நிலாவிற்கு வரும் கள்ளரை திருத்துவதற்கு எந்த வழியைக் கண்டுபிடிக்கலாம்?

நாரதர் : ஒருவழியும் எனக்குத் தோன்றவில்லை, நம்முடைய அவையைக் கூட்டி நம் தேவர்களில் யாரையாவது மறுபிறப்புப் பிறந்து நிலவுலகில் சென்று அங்கு இருந்துகொண்டு ஆய்ந்து பார்க்க ஆய்வுக் கூடங்களுக்கு அனுப்புவதுதான் நல்ல வழியாகத் தெரிகிறது. ஏனென்றால் அவர்கள் எப்படி இங்கு வருகிறார்கள். எதன்மேல் ஏறி வருகிறார்கள் எனத் தெரிந்து கொண்டால் அவர்களை வரவிடாதபடி செய்துவிடலாம்.

தேவே : நீர்தான் அதற்குத் தகுந்தவர்.

நாரதர் : சே!சே! அங்குபோய் நான் பிறக்கமாட்டேன். முன்னால் எம்பெருமாள் திருமால் இராமனாக நிலவுலகில் பிறந்துவிட்டு, இராவணனிடம் பட்டபாட்டை நினைத்தால் தொடை நடுக்கம் உண்டாகிறது.

தேவே : பின் என்னதான் செய்வது?

நாரதர் : நீங்கள்தான் கண்டுபிடிக்க வேண்டும்!

தேவே : ஆமாம், ஒன்றுசெய்யலாம் என்று நினைக்கிறேன். அஃதாவது முன்னால் அமெரிக்கக் கென்னடி இங்கேதானே இருக்கிறார். அவரை மீண்டும் அமெரிக்காவில் பிறக்கச் செய்யலாமா?

நாரதர் : அதுநல்ல சிந்தனைதான். ஆனால் அவர் மீண்டும் அமெரிக்காவில் பிறக்க ஒத்துக்கொள்ள மாட்டார்.

தேவே : ஏன்?

நாரதர் : அவரை ஒருவன் சுட்டுக் கொன்றுவிட்டான். இனி அவர் அங்கு எப்படிப் போவார்?

தேவே : பிறகு எப்படித்தான் தடுப்பது?

நாரதர் : இப்போதைய அமெரிக்கக் குடியரசுத்தலைவர் ரீகனைக் கூட்டிக்கொண்டு வந்து ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

தேவே : நல்ல எண்ணம். அப்படியே செய்யலாம். நாரதரே உடனே நம் எமனை அழைத்து ரீகனை அழைத்துவரக் கட்டளையிடலாமா?

நாரதர் : ஆமாம்! அப்படியே செய்வோம்.

தேவே : நீர் நாளைக்கு எமனை நான் அழைத்ததாகக் கூறி அழைத்து வாரும்.

நாரதர் : சரி, போய்வருகிறேன்.

## காட்சி 4

உறுப்பினர்கள் : தேவேந்திரன், நாரதர்.

நிலை : தேவேந்திரன் அவையில் இருக்கிறார். நாரதர் வருகிறார்.

நாரதர் : திருமால்......திருமால்!

தேவே : வாரும் வாரும் எங்கே எமன்?

நாரதர் : அவர் இங்குவர மறுத்து விட்டார்.

தேவே : காரணியம். நான் சொன்னதைச் சொல்லிவிட்டீரோ?

நாரதர் : ஆமாம்!

தேவே : அதை ஏன் சொன்னீர்?

நாரதர் : அவர் உடல்நலமில்லாமல் இருக்கிறார். அதனால் என்னைப்பார்த்து எதற்கு என்று கேட்டார். நான் சொல்லி விட்டேன். அவர் அதற்கு, நான் எழுந்திருக்க முடியவில்லை. இந்த வேளையில் அமெரிக்காவிற்கு என்னால் போகமுடியாது என்று கூறிவிட்டார்.

தேவே : நலமில்லாவிட்டால், 'அமெரிக்காவில் நல்ல மருத்துவர்கள் இருக்கிறார்கள். போய் மருந்து சாப்பிட்டு நல்ல உடலோடு வரலாம்' என்றுகூறி என்னுடைய கட்டளையை மறக்காமல் உடனே வரவேண்டும் என்று கூறி அழைத்து வாரும்.

நாரதர் : தேவேந்திரா! ஒரு தாழ்வான வேண்டுகை. வேறு யாரையாவது அனுப்பி எமனை அழைத்துக்கொள்ளுங்கள்.

தேவே : ஏன்?

நாரதர் : அவர் விழிப்பதைப் பார்த்தால் அச்சமாக இருக்கிறது. பிழைப்பாரோ? என்னமோ தெரியவில்லை.

தேவே : தேவர் உலகத்திற்கு இஃது ஒரு கெட்டகாலந்தான். நாரதரே ஒருவரும் வேண்டாம். நீர் போய் ரீகனை நான் அழைத்ததாக வரக்கூறும், வருவார்.

நாரதர் : தேவரே வேறு வேலை எதுவும் தந்தால் செய்கிறேன். ஆனால் ரீகனை இங்கு அழைத்து வரும் பணியை மட்டும் எனக்குத் தரவேண்டாம். அஃது என்னால் செய்ய இயலாத செயல்.

தேவே : ஏன் இயலாது?

நாரதர் : என் தோற்றத்தைக் கண்டதும், என்னைக் கள்ளன் என்று பிடித்துச் சிறையில் வைத்து விடுவார்கள். பின் என்னை அங்கு யார் பிணையலில் எடுப்பார்?

தேவே : நாரதரே, நம்மைச் சிறைவைக்க அவ்வளவு துணிச்சலா, மாந்தர்களுக்கு?

நாரதர் : ஐயோ, அங்கு நடக்கும் கதைகளைச் சொன்னால் உடம்பெல்லாம் புல்லரிக்கும் தேவா?

தேவே : அப்படி என்ன? சொல்லும் பார்க்கலாம்?

நாரதர் : நிலஉலகத்தில் ஓராண்டிற்கு ஒருமுறை கோயில்களில் திருவிழா வரும். அப்போது பல்லக்கு ஊர்வலம் நம்மவர்களுக்கு, இளநீர், பால் குடமுழுக்கு, சந்தனம், சாந்துப் பொடி பூசி ஆடை உடுத்தி ஒப்பனை செய்து, நகைகளையும் போட்டுச் சிலையைப் பல்லக்கில் தூக்கி வைப்பார்கள். நான்கு தெருக்களையும் பல்லக்குச் சுற்றிவரும். சிறைப்பட்ட குற்றவாளியை நடத்துவது போல பல்லக்கைச் சுற்றிலும் காவலர் காத்து வருவர். உலா முடிந்ததும் கோயிலில் கொண்டு சென்று இறக்கி ஓர் அறைக்குள் போட்டுக் குற்றவாளியை அடைப்பதுபோல அடைத்து இரும்புக் கதவில் திண்டுக்கல் பூட்டுப் போட்டுப் பூட்டிவிடுவார்கள். அவ்வளவுதான், அடுத்த ஆண்டுதான் பிறகு விடுதலை. அதுவரைக்கும் குளிப்பும் கிடையாது. உணவும் கிடையாது. ஒரு குற்றமும் செய்யாத நம்மை மண்ணுலகத்தில் சிறைவைத்து விடுகிறார்கள். யாராவது அங்குப்போய் பிணையல் எடுத்தோமா? இல்லையே.

தேவே : அந்த மாந்தர்களை நிலஉலகத் தெய்வங்கள் ஒன்றுஞ் செய்யவில்லையா?

நாரதர் : என்ன செய்ய முடியும்?

தேவே : சாவிப்புச் (சபித்தல்) செய்தால் என்ன?

நாரதர் : அ'தெல்லாம் கதை! எவன் அதற்கெல்லாம் அஞ்சுவான்? நாம்தாம் மாந்தர்களைக் கண்டு அஞ்சவேண்டியுள்ளது.

தேவே : ஆமாம். நம்மைக் காட்டிப் பிழைக்கிறவன் கட்டிய கதைகளை எல்லாம் நம்ப ஆள்கள் இல்லை. சரி, நாரதரே! அடுத்து என்ன செய்யலாம்? எப்படியும் இந்தக் கள்ளனை நிறுத்தியாக வேண்டுமே.

நாரதர் : நீங்கள்தான் இதற்கு ஒரு வழியைக் காணவேண்டும்.

தேவே : ஆமாம் இப்படிச் செய்தால் என்ன? நீர் சொல்வதைப் பார்த்தால் மேலுலகத்திலிருந்து இனி யாரும் நிலஉலகத்தில் போய்ப் பிறக்கமாட்டார்கள். எனவே கென்னடியை மீண்டும் அமெரிக்காவில் பிறக்கச்செய்து, அவர் மூலமாக இங்கு வருபவர்களை நிறுத்திவைக்க வேண்டியதுதான்.

நாரதர் : நல்ல திட்டந்தான். ஆனால் அவர் மண்ணுலகஞ் செல்ல மாட்டார் என்று நினைக்கிறேன்.

தேவே : ஏன் ?

நாரதர் : அவரை அங்கொருவன் துமுக்கியால் சுட்டுதான் இங் அனுப்பினன். திரும்ப அங்குப் போவாரா, என்பது ஐயம்.

தேவே : என்ன நாரதரே, நான் போடும் திட்டத்திற்கெல்லாம் தடை போடுகிறீர். நாமாகவே இப்படி அப்படி என்று முடிவு எடுத்துக் கொள்வதா?

நாரதர் : நிலஉலக நிலை அப்படியிருக்கிறது. அதனால்தான் இப்படி நான் பேசுகிறேன்.


தேவே : நீர் ஒன்றும் பேசவேண்டாம். கென்னடியை நான் அழைத்ததாகக் கூறி அழைத்துவாரும். நான் பேசிக் கொள்கிறேன்.

நாரதர் : தேவா! கென்னடி பொன்னுலகத்தில் இருக்கிறாரா? அல்லது அளறு (நரகம்) உலகத்தில் இருக்கிறாரா?

தேவே : எனக்கென்னையா தெரியும்? ஈரேழு உலகத்தையும் சுற்றிவருகிறீர். இதையெல்லாம் என்னிடமா கேட்பது? சீ! பெரிய துன்பமாக இருக்கிறது! போம், போம் கென்னடி எந்த உலகத்தில் இருக்கிறார் என்று சித்திரப்புத்திரனைக் கண்டு, அவர் கணக்கை எடுத்துப்பார்த்துக் கண்டுபிடித்து அழைத்துவாரும்.

நாரதர் : சினம் வேண்டாம் தேவா! நான்சென்று கென்னடியை அழைத்து வருகிறேன். (போகிறார்)

(தொடரும்)




(சுருக்க மதிப்புரைக்கு நூலின் இரண்டுபடிகளும்
விரிவான மதிப்புரைக்கு ஐந்து படிகளும்
அனுப்ப வேண்டும்)

1. எலும்புக் கூடுகள் எரிமலையானால்-?

ஆசிரியர்: வே. வெங்கிருபழனி.
வெளியீடு: எழிலமுதன், 14, பெரியதெரு,
திருவல்லிக்கேணி, சென்னை-5.
பக்கம்: 32, விலை உரு. 2.

22 தலைப்புகளில், சிறியனவும் பெரியனவுமான உரைப் பாக்கள் கொண்ட நூல் இது. உணர்வெழுச்சியும் புதுமைக் கருத்தும் அடிகள்தோறும் கொப்பளிக்கின்றன.

காக்கையே, நீ! என்னிடத்தில் வந்து
கரையாதே!
நானே, வறுமையென்னும் காசநோயில்
கரைந்து கொண்டிருக்கின்றேன்!
நான், எச்சில் கையைக்கூட உதறாதவன்!
காரணம், எச்சில் சோறு கண்டே
ஏழுநாள் ஆகிவிட்டதே!

— இவ்வாறான எழுச்சி துள்ளும் நடை! உணர்வு துள்ளும் கருத்துகள்! ஆனால் இவை அந்த ஏழைகளின் கைகளில் போய் கிடைக்க வேண்டுமே! அப்பொழுதன்றோ, இப் பாவலர் விரும்புமாறு,

பூகம்பம் வெடிக்கும்; புரட்சி பரவும்;
புதியதோர் உலகம் புயலாய் வரும்!

2. வாணிதாசன் கவிதைகள் (தொகுதி-2)

பதிப்பாசிரியர்: நலங்கிள்ளி.
வெளியீடு: வாணிதாசன் பதிப்பகம், சேலியமேடு (அஞ்.)
பாகூர் (வழி) புதுச்சேரி மாநிலம்—607 402.
பக்கம்: 108; விலை உரு. 6.

புதுமைப் பாவலர் வாணிதாசனார் அவர்கள் மறைந்து ஏழாண்டுகளுக்குப் பிறகு, அவரெழுதி வைத்திருந்த வெளிவராத

பாடல்களை, அவர் திருமகனார் அரங்க—நலங்கிள்ளி, 'வாணி தாசன் கவிதைகள்' — தொகுதி-2 என்னும் பெயரில் இந்நூலை வெளியிட்டுப் பெருமை பெற்றுள்ளார்.

சமுதாயம், காதல் நினைவுகள், கையறுநிலை, எண்ணம் ஆகிய நான்கு பெருந்தலைப்புகளில் தொகுக்கப்பெற்ற 56 பாடல்கள் இந்நூலில் உள.

'சமுதாயம்' எனும் பகுப்பில் உள்ள 17 பாடல்களில், 'தமிழா அஞ்சாதே' 'சுட்டுப்பொசுக்குவாய்' 'புதிய உலகம்' 'தொண்டு செய்' 'இதுவா ஆட்சி' என்பன சில பாடல்களின் தலைப்புகள்!

'காதல் நினைவுகள்' எனும் பகுப்பில் உள்ள 16 பாடல்களில், 'அவள் வேண்டும்' 'எவர் தடுக்கக்கூடும்' 'காதல்' 'நிலவைக் கண்டேன்' 'ஓடோடிப் போனாய்' ஆகிய தலைப்புகளில் சில பாடல்கள்!

'கையறுநிலை' எனும் பகுப்பில் உள்ள 12 பாடல்களில், 'கண்ணீர் சிந்துக கண்களே' 'பாவேந்தரோடு' 'யார் பொறுக்கக் கூடும்?' 'யாருக்காக வாழவேண்டும்?' 'மறைந்தாரே அண்ணா' என்பன போன்ற தலைப்புகள் சில பாடல்களுக்கு!

'எண்ணம்' எனும் பகுப்பில், 'வெண்கழுகுப் பேடை' 'தமிழ் நாடு வாழ்கவே' 'இனம் ஒத்தால் நாம் வாழ்வோம்' — என்பன சில பாடல்களின் தலைப்புகள்!

பாவலர்மணி வாணிதாசனார் பாவேந்தர் பாரதிதாசனார் மேல் பேரன்புகொண்டவர். பாவேந்தரும் அவர்மேல் நல்லன்பும் நன்மதிப்பும் கொண்டவர்.

எல்லாரும் நல்லாரென் றெண்ணுவார் இன்றமிழ்
வல்ல கவிவாணி தாசனார்—அல்லும்
பகலும் தமிழர்தம் பண்பாடு பற்றிப்
புகலும்பாட் டொவ்வொன்றும் பொன்—

என்பார் பாரதிதாசனார், வாணிதாசர் பற்றி!

வாணிதாசனார், தமிழச்சி, கொடிமுல்லை, தொடுவானம், எழிலோவியம், இன்ப இலக்கியம், குழந்தை இலக்கியம், சிரித்த நுணா, எழில் விருத்தம் முதலிய 15 நூல்கள் எழுதித் தமிழ்த் தாயை அணி செய்துள்ளார்.

இவரின் பாடல்கள் சொற்சுவையும், பொருட்சுவையும் நிரம்பி, நல்ல கருத்தாழம் கொண்டனவாய்ப் படித்தோர் மனத்தில் எளிதே நிலைக்கும் சிறந்த யாப்பமைதி நிறைந்தவை. தாம் சொல்ல விரும்பிய கருத்தைச் சுற்றி வளைத்துச் சொற்களை மிகுக்காமல் சொல்லும் திறம் இவருக்குக் கைவந்தது.

'தேன்பிறந்த செய்தியெல்லாம் பூக்கூட்டம் சென்று
செவியோடு வண்டிறந்துச் சொன்னதில்லை'

என்னும் பாடலடி, அத்திறத்திற்கோர் எடுத்துக்காட்டு!

Scanned with CamScanner

ஆசைக்கும், புகழுக்கும், பொருளுக்கும் பாட்டெழுதாமல், கொள்கைக்குப் பாட்டெழுதிய உயர் நோக்குப் பாவலர் வாணிதாசனார்.

'நேருக்கு நேர்நடக்கும் அறிவற்ற செய்கை
நெறிப்படுத்த என்பாடல் வழிவகுத்தால் போதும்!'

'கெடல்படிந்த இவ்வுலகை மாற்றுவோன் மூடன்!'

'தாய்நாடும் தாய்மொழியும் வாழவேண்டும்;
தலைநிமிர்ந்து மற்றவர்போல் நடக்க வேண்டும்'

'எல்லோரும் புறப்படுவோம்! புத்துலகம் காண
எங்கெங்கும் பரவட்டும் பரவட்டும் தீயே!'

— என்னும் பாடல் வரிகள் அவரின் கொள்கை வேகத்தைப் புலப்படுத்துவன.

'நாய்பெற்ற சீலையைப்போல் மக்களெல்லாம்
பாரதத்தில் நலியக் கண்டு'

'எழுத்துப் புணர்ச்சியினைப் போலே—நாம்
இரண்டற ஒன்றிவிட்ட தாலே'

'இருள்திரையைக் கிழித்தெறிந்தான் கீழ்த்திசையில் பரிதி
ஈடற்ற திராவிடத்தின் தந்தைபெரி யார்போல்'

— என்னும் பாடலடிகள் அவர் உவமைத்திறத்தை வெளிப்படுத்திக் காட்டுவன.

அவருக்கிருந்த பாவேந்தர் தொடர்பை இப்படிக் கூறுகிறார் வாணிதாசனார்.

'பாவேந்த ரோடென்றும் அருகிருக்கும் பேற்றைப்
பல்லாண்டு பெற்றவன் நான்! பலநூலைக் கற்றேன்!

மொழித்தூய்மையை அவர் கீழ்வருமாறு வலியுறுத்துகிறார்.

'தனித்து வாழ்ந்தால் தமிழ்வாழும்'

'நாடெடுத்த எனதாசான் பாவேந்தன் தந்த
நற்கவிதை தனித்தமிழில் நாவூறும் செந்தேன்'

பாவலர் வாணிதாசனார் தம் பாடல்களில் பொதுமை உணர்வை வலியுறுத்திச் சொல்கிறார். அந்நிலையை உருவாக்கலே தம் வாழ்க்கையின் நோக்கம் என்றும் கூறுவார்.

'செல்வந்தர் பெருந்திருட்டே இன்றுள்ள நாட்டின்
சிறுமைக்கும் வறுமைக்கும் அடிப்படையாம்'

'ஏழையில்லை; செல்வரில்லை; என்கின்ற என்றன்
இக்கொள்கை நிலைநாட்டல் என்வாழ்க்கை நோக்காம்!'

தனி நாட்டுணர்வும் பாவலரிடம் குமிழியிடுவதைச் சில பாடல் வரிகளில் காணலாம்.

'மற்றவர் நமையாள வாய்பொத்திக் கிடப்பதே,
ஒற்றுமை எனச்சொன்னால் பொருளல்ல உன்னிப்பார்!'

'அல்லும் பகலும் தாய்நாட் டாக்கத்திற் குழைத்தவர்
அடிமையாய் இருப்பதோ? மற்றவர் ஆள்வதோ?'

'திருமிக்க திராவிடனே! நீநாட்டை ஆள்வாய்!'

'மண்ணின் விடுதலை பிறப்புரிமை!
மகனே எழுவாய் போர்முரசம்
விண்ணும் அதிர அறைவாய், நீ!
விடுதலை! தாயகம் விடுதலையே!'

இந்தியைத் தீவிரமாக எதிர்க்கும் உணர்வு வாணிதாசனாரிடம் உள்ளது.

'திராவிட நாட்டில் இந்தியை மீண்டும்
திணிக்க வேண்டாம்! திணிப்பீ ராயின்
நீயும் உன்றன் அரசியல் நண்பரும்
அல்லல் உறுவீர்!'

— என்று வடநாட்டு ஆள்வோனைப் பார்த்து எச்சரிக்கை கூறுகிறார், பாவலர்.

கையறுநிலைப் பாடல்களாக அவர் எழுதியுள்ள கழிவிரக்கப் பாடல்களில், பாவேந்தர் மறைவின்பொழுது அவர் உள்ளம் வெளிப்படுத்திய ஆற்றாமையில்தான் எத்துணை அவலம்!

மற்றும், புதுவை இலக்கணப் புலவர் குமாரசுவாமி, மயிலை சிவமுத்து, அறிஞர் அண்ணா, டி.கே. சண்முகம் ஆகியோர்க்காகவும் அவர் இரங்கி யெழுதிய பாடல்கள் இத்தலைப்பில் இடம் பெற்றுள்ளன.

குடியரசுத் தலைவர் சாகிர் உசேன் அவர்கள் மறைவின் பொழுது எழுதிய பாடலும் இவ்வரிசையில் உள்ளது, அவரின் பொதுமைக் கண்ணோட்டத்திற்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

பாவலர்மணி வாணிதாசனார் தமக்கிருந்த கொள்கை உணர்வைப்போலவே, இயற்கை உணர்வையும் சிறந்த முறையில் வெளிப்படுத்தியிருக்கிறார். அவர் கண்டு காட்டும் இயற்கைக் காட்சிகளில்தாம் எத்துணை அழகு! உயிரோட்ட இயல்பு!

'மழை உதிர்ந்த கற்பாறைப் பள்ளத்து நீரை
மானினங்கள் கால்மடித்து வாலாட்டி உண்ணும்'

என்னும் அடிகள் வண்ண ஓவியமாகவே வெளிப்பட்டிருக்கின்றன!

Scanned with CamScanner

வெண்கழுகுப் பேடை ஒன்றின் வடிவத்தை எத்துணை அழகாகச் சொற்களில் வடித்திருக்கிறார், பாருங்கள்!

'கருங்கண்கள், வெள்ளிறகு, பிளந்தவாய் மூக்கு,
கன்னியர்கள் குளிக்கின்ற நிறமஞ்சள் நெற்றி,
பெருங்கால்கள் உளியொத்த சிறியவிரல், காட்டுப்
பேரீந்தின் முள்போன்ற நகக்கூர்மை எல்லாம்
ஒருங்கமைந்த வெண்கழுகுப் பேடை' — யின்

தோற்றம், அதை நம் கண்முன்னர் கொண்டுவந்து நிறுத்துகின்றதன்றோ?

ஒருசில அச்சுப் பிழைகளும், யாப்புப் பிறழ்ச்சிகளும், வெளியிட்டவரின் கவனக்குறைவால் நேர்ந்திருக்காலம். மறுபதிப்பில் சரிசெய்து கொள்ளலாம்.

நல்ல பாடல்களை விரும்புவார், தள்ளாமற் படித்துச் சுவைக்க வேண்டிய தொகுப்பு இது.


## வாங்கிவிட்டீர்களா ?

பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் புதிய வெளியீடுகள்! விற்பனைக்கு அணியமாக உள்ளன.

1. பாவேந்தர் பாரதிதாசன் — 14.00
2. இனம் ஒன்றுபட வேண்டும் என்பது எதற்கு? — 1.00
3. வாழ்வியல் முப்பது (மறுபதிப்பு) — 1.50
4. சாதித் தீமைகளும் அதை ஒழிக்கும் திட்டமும் — 0.50
5. ஆரியப்பார்ப்பனரின் அளவிறந்த கொட்டங்கள் — 2.25
6. இலக்கியத்துறையில் தமிழ் வளர்ச்சிக்குரிய ஆக்கப்பணிகள் — 1.50

### பழைய வெளியீடுகள்

1. கனிச்சாறு (முதல் தொகுதி) — 15.00
2. ,, (2-ஆம்தொகுதி) — 11.00
3. கனிச்சாறு (3-ஆம் தொகுதி) — 17.50
4. கொய்யாக்கனி — 9.50
5. உலகியல் நூறு — 6.50
6. ஐயை (இரு பகுதிகளும்) — 9.00
7. பள்ளிப் பறவைகள் — 5.00
8. தன்னுணர்வு — 1.50

தொடர்புக்கு : மே/பா தென்மொழி, சென்னை-5.

தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் வளர்ச்சிக்கு என யான் முன்பு ஒரு மடல் எழுதியிருந்தேன். ஐயா அவர்கட்கு என் பணிவான வணக்கத்தை கூறி இம் மடலை முடிக்கின்றேன்.

— இன்னனம் தங்களன்புள்ள ஆ. பழனியாண்டி
தமிழாசிரியர், வ. களத்தூர்.

(ஆசிரியர் குறிப்பு : பேரன்புடையீர், தங்கள் மெய்யான அன்புள்ளத்திற்கு என் நெஞ்சு நிறைந்த நன்றி. எனக்கு ஒரு சிறிதும் ஓய்விருப்பதில்லை. ஓய்விருக்கும்பொழுது கட்டாயம் மடல்கள் எழுதுகிறேன். பொறுத்துக்கொள்ளுங்கள்! தேவையான பொழுது தொடர்புகொள்வேன். — பெருஞ்சித்திரன்)

01 1036 : தமிழ்க்கடல் பாவலரேறு ஐயா அவர்கட்கு வணக்கம். தி. மு. கழகம் தமிழுக்குத் தனி மதிப்பை மீட்டுத் தந்தது. என்றாலும், தனித்தமிழைப் பரப்புவதை அக் கழகம் தலையாய கொள்கையாகக் கொள்ளவில்லை. பேராயக்கட்சி ஆட்சிக் காலத்தில் 'சிவில் & கிரிமினல் கோர்ட்டுகள்' — என்று தமிழில் எழுதப்பட்டது. தி. மு. க. ஆட்சியில் 'நீதிமன்றங்கள்' என்று கலப்புத் தமிழால் எழுதப்பட்டது. இப்படி, கலப்புத் தமிழால் எழுதாமல் 'அறமன்றங்கள்' - என்று தனித் தமிழில் எழுதும்படியான நிலைக்கு, மக்களை அணியப்படுத்திவதுபோன்று, அனைத்துத் துறைச் செயல்பாடுகளுக்கும் உ. த. மு. க. தேவையானதோர் இயக்கமேயாகும்.

சிற்றூர்ப்புறங்களில் தி. மு. க வைச்சார்ந்த சாதி இந்துக்கள் (அதாவது ஐந்தாறு சாதியினர்மட்டும்) தாழ்த்தப்பட்டவர்களைக் கொடுமைப்படுத்துகிறார்கள், என்ற கருத்து பரவலாக இருந்து வருகிறது. தேர்தலைக் கருதி தி. மு. க. உயர்மட்டத்தலைவர்கள் இக் கொடுமையைக் கண்டும் காணாமலும் இருந்து வருகிறார்கள். திருச்சி மாவட்டம் திருவெறும்பூரைச்சார்ந்த கூத்தைப்பார் சிற்றூரின் (கள்ளர் சாதியினர்பகுதி) முகப்பில், தாழ்த்தப்பட்டவர்களுக்கு அரசு குடியிருப்புக் கட்ட இசைவளித்ததைத் தடுக்க, அப்பகுதி தி.மு.க.வைச்சார்ந்த சாதி இந்துக்கள், எந்தெந்த இழிசெயலை மேற்கொண்டார்கள், எப்படி நடந்துகொண்டார்கள்? இது குறித்து முதலமைச்சரை, கழகமாக தி.மு.க இன்றைய சட்டமன்றக் கட்சித்தலைவர் ஏன் அணுகினார்? என்பன இவ் உண்மையை தெளிவாக்கும்.

இதுபோன்று ஏராளமான குறைகளைக்கொண்டுள்ள தி.மு.க. வையோ, அல்லது தமிழர்நலம் நாடும், வேறு இயக்கங்களையோ, விரும்பாதவர்களுக்கு உ.த.மு.க. தேவையான ஓர் இயக்கமாகும். இதற்காகத் தி மு.க.வையும் அதன் தலைவர் கலைஞரையும் தாங்கள் தாறுமாறாக எழுதிவருவதைப் படிக்கும்போது, தமிழர்களுக்குள்ள 'தான்' என்னும் போக்கு தங்களையும் பற்றிக் கொண்டதோ என ஐயுற வேண்டியுள்ளது.

இடைத்தேர்தல் நடைபெறும் சூழலில், 'கலைஞர் சிந்திக்க வேண்டும்' என்று ஆசிரியவுரை தீட்டித் திட்டிக் கொட்டியிருக்கிறீர்களே, அதன் உள்நோக்கம் என்ன? உ.த.மு.க — வினர் அ.தி.மு.க.வுக்கு ஒப்போலை அளிக்க வேண்டுமென்று, மறை பொருளில் எழுதியிருக்கிறீர்கள், என்பதுதானே அதன் உட்பொருள். தி.மு.க-வை விட அ.தி.மு.க-தமிழினப்பற்றுக்கொண்ட பாசறையா?

1. அனைத்துச் சாதியினரையும் பூசக(அர்ச்ச)கராக்க வேண்டும்,
2. அனைத்துப் பேருந்துகளையும் அரசுடைமையாக்க வேண்டும்,

3. உழுபவர்க்கே நிலத்தை உடைமையாக்க வேண்டும்,
4. அரசுடைமையை விரிவுபடுத்த வேண்டும்—என்னும் முற்போக்குக் கொள்கைகளைச் செயல்படுத்த, கலைஞர் ஆட்சியில் எடுக்கப்பட்ட உரிய நடவடிக்கைகளை எண்ணிப்பார்த்திருக்க வேண்டாவா? புலவர் கலியபெருமாள் அவர்களைக் கலைஞர் ஆட்சி சிறைவைத்ததைக் குற்றமாகக் காட்டுகிறீர்கள். ஆனல், அவருக்கு 'உயிர்' ஈவு (பிச்சை) அளிக்க கலைஞர் எடுத்த நடவடிக்கையை மூடி மறைக்கிறீர்கள். கலைஞரிடமும் தி.மு.க.விடமும் நிறை, குறைகள் இருந்தாலும், ஒப்பிட்டுப்பார்க்கும்போது, நிறையே அதிகமாக இருக்கிறது என்பதை தமிழர் நலம்நாடுவோர் மறுக்க முடியாது.

தங்களுடைய சாதி ஒழிப்புத்திட்டமும் - இட ஒதுக்கீட்டுக் கொள்கையும்-தமிழர்நலத் தலைவர்களிடம் காட்டும் பிணக்கும்-ஆத்திகப்பற்றும் எனக்கு உடன்பாடு இல்லையென்ருலும், தமிழுக்காக தம்மையே ஒப்படைத்து (அர்ப்பணித்து)க் கொண்டு, ஏறத்தாழ கால் நூற்ருண்டுக் காலம் போராடிவரும் தமிழ்க்கடலாம், தமிழ்மாமணியாம் தங்களை நான் பூரிப்போடு ஏற்றுக்கொண்டு, உ.த.மு.க-வின் வளர்ச்சிக்கு உறுதுணையாகவும் இருக்கிறேன்.

தமிழனுக்குத் தமிழனே குழிபறிக்கிற வேலைக்குத் தாங்களும் அமரித்தமாகிவிடாதீர்கள், என்று அன்போடு வேண்டுகிறேன். தமிழ்நிலம், தென்மொழி, தமிழ்ச்சிட்டு வளர்ச்சிக்கு உருபா 15/- (பதினைந்து) பணவிடைத் தாள் மூலம் அனுப்பியுள்ளேன்.

— உண்மையுள்ள துப்பாக்கி; தி. அன்பழகன், திருச்சி-620016

0: 1037 : அன்புப் பாவலரேறு ஐயா,

நான் கொற்கைத் தமிழ்மன்ற நிகழ்ச்சிக்கு வந்து தங்களுடன் சரிவர உரையாட முடியாமல் போயிற்று. எவ்வளவோ செய்ய எண்ணுகிறேன். எண்ணுவதெல்லாம் செயல்வடிவம் பெறுவதில்லை. நம் உ.த.மு.க.வை முகவை மாவட்டத்தில் வலிவோடும் பொலிவோடும் கட்டமைக்க விரும்புகின்றேன். ஓடியாடி வினையாற்ற முடியவில்லை. கூடியவிரைவில் நண்பர்களைக் கலந்து ஒரு மாநாட்டினைக் கூட்டுவோம்! — மெய். அருள்மொழியன்
முகவை மாவட்டம்.

0: 1038 : பேரன்புப் பெருந்தகை பாவலரேறு ஐயா அவர்களுக்கு, நெஞ்சார்ந்த வணக்கங்கள். எனது வாழ்நாள் ஆசைகளில் ஒன்று தங்கள் தலைமையில் எனது மணவிழா அமைய வேண்டுமென்பது. ஒரு சில கரணியங்களால் தங்களை நேரில் கண்டு ஒப்புதல் பெற இயலாமற் போய்விட்டது.

அடுத்து ஓர் ஒப்புதல் எதிர்நோக்கியும் இம்மடலை எழுதுகிறேன். அஃதாவது தங்களின் தமிழ்ச்சிட்டு இதழில் தொடர் கட்டுரையாக வெளிவந்த 'செயலும், செயல் திறனும்' என்னும் கட்டுரையினை அடிப்படையாகக்கொண்டு எங்கள் ஒன்றிய ஆசிரிய நவடுக் கூட்டத்தில் 'குறள் விளக்கம்' என்னும் தலைப்பில் உரையாற்றினேன். அதுபோழ்தும் தங்கள் பெயரையும், பாடல்களையும் கூற நான் தவறவில்லை. அவ் வுரையின் முகத்தான் தங்கள் தொடரினைச் சுருக்கி நான் ஒரு கட்டுரையினை எழுதினேன். இதனைப் படிக்க எனக்கு ஒரு வாய்ப்புத் தரவேண்டிக் கோவை